தின பூமி
thinaboomi.com
பூமி: 30 சுற்று: 214 சித்திரை 30
TN-TVL/25/2012-2014
நெல்லை, செவ்வாய், மே 13, 2025
‣ சென்னை ‣ மதுரை ‣ திருச்சி ‣ கோவை ‣ நெல்லை ‣ சேலம் ‣ வேலூர் ‣ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**முடிவுக்கு வந்தது வர்த்தக போர்: பரஸ்பர வரிகளை குறைக்க சீனா, அமெரிக்கா ஒப்புதல்**
...2-ம் பக்கம்

**நாட்டின் பாதுகாப்பிற்காக 10 செயற்கைக்கோள்கள் 24 மணி நேரமும் கண்காணிப்பு: இஸ்ரோ**
...3-ம் பக்கம்

**இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு**
...6-ம் பக்கம்






● உலகப்புகழ்பெற்ற மதுரை சித்திரை திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான கள்ளழகர் மதுரை வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது. அப்போது பச்சை பட்டு உடுத்தி தங்கக்குதிரை வாகனத்தில் ஆற்றில் இறங்கினார். அப்போது லட்சக்கணக்கான பக்தர்கள் அகமகிழ்ந்து அழகரை தரிசனம் செய்தனர். மக்கள் கடலில் அழகர் மிதந்து வந்த காட்சி.

### தங்கக்குதிரை வாகனத்தில் பச்சைப்பட்டு உடுத்தி

# மதுரை வைகை ஆற்றில் எழுந்தருளிய கள்ளழகர்

### லட்சக்கணக்கான பக்தர்கள் அகமகிழ்ந்து தரிசனம்

மதுரை, மே 13-

**மதுரை சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வு நேற்று (மே 12) காலை 6 மணியளவில் நடைபெற்றது. இதில், தங்கக்குதிரை வாகனத்தில் பச்சை பட்டு உடுத்தி கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.**

**திரளான பக்தர்கள்...**

உலகப்புகழ் பெற்ற மதுரை சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் நிகழ்வு பெரும் விமரிசையாக ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. தெற்கு மாசி வீதி அருள்மிகு வீரராகவப் பெருமாள் வெள்ளிக்குதிரை வாகனத்தில் வரவேற்றார். பின்னர், ராமராயர் மண்டகப்படியில் குழுமியிருந்த திரளான பக்தர்கள் கள்ளழகர் மீது தண்ணீரைப் பீய்ச்சியடிக்கும் நேர்த்திக்கடன் செலுத்தினர்.

**அருள்பாலித்தார்...**

லட்சக்கணக்கில் திரண்டிருந்த பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருந்த பக்தர்கள் கோவிந்தா... கோவிந்தா... என கோஷமிட்டு கள்ளழகரை வழிபட்டனர். மேலும், நேர்த்திக்கடனாக பக்தர்கள் கருப்புசாமி வேடமிட்டு அழகர் மீது தண்ணீரை பீச்சி அடித்தனர். தங்கக்குதிரை வாகனத்தில் பச்சை பட்டுடுத்தி கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பச்சை பட்டுடுத்தி அழகர் ஆற்றில் இறங்கினால், நாடு செழிக்கும் என்று நம்பப்படுகிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலை அழகருக்கு அணிவிக்கப்பட்டது.

**கண்காணிக்கும் பணி...**

பாதுகாப்பு பணியில் மட்டும் 4000-க்கும் அதிகளவிலான போலீசார் குவிக்கப்பட்டு ஈடுபடுத்தப்பட்டு, 400 இடங்களில் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. பாதுகாப்பு காரணமாக போக்குவரத்திலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ட்ரோன்கள் மூலமும் கண்காணிக்கும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அழகர் வைகையாற்றில் எழுந்தருளும் பகுதியான ஆழ்வார்புரம் ஆற்றுப் பகுதியில், இந்து அறநிலையத் துறை, வீரராகவப் பெருமாள் கோயில் சார்பில் மண்டகப்படி அமைக்கப்பட்டு 2 டன்னுக்கு அதிகமான மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

**மண்டூக முனிவருக்கு...**

அழகர் எழுந்தருளிய வைகையாற்றுப் பகுதியில் பக்தர்கள் பாதுகாப்பாக சுவாமி தரிசனம் செய்வதற்காக மூன்று அடுக்கு தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. நேற்று இரவு வண்டியூர் வீரராகவப் பெருமாள் கோயிலில் எழுந்தருளிய கள்ளழகரை விடிய விடிய பொதுமக்கள் தரிசித்தனர். அதன் தொடர்ச்சியாக இன்று (மே 13-ம் தேதி) காலை அங்கிருந்து வண்டியூர் வைகை நடுவே உள்ள தேனூர் மண்டபத்தில் எழுந்தருளும் கள்ளழகர் மண்டூக முனிவருக்கு சாப விமோசனமும், நாரைக்கு முக்தியும் அளிக்கிறார்.

**தசாவதாரம் நிகழ்ச்சி...**

அங்கிருந்து இரவில் ராமராயர் மண்டகப்படிக்கு சென்று எழுந்தருளியதும், விடிய விடிய தசாவதாரம் நிகழ்ச்சி நடைபெறுகிறது. புதன்கிழமை (மே 14-ம் தேதி) ராமராயர் மண்டகப்படியில் இருந்து புறப்பாடாகி வைகை திருக்கண், ஆழ்வார்புரம், கோரிப்பாளையம் வழியாக தல்லாகுளம் சேதுபதி மண்டகப்படியில் கள்ளழகர் எழுந்தருள்வார். மே 14-ம் தேதி இரவு பூப்பல்லக்கில் எழுந்தருளும் கள்ளழகர், மே 15-ம் தேதி காலை அழகர் மலை நோக்கி பல்லக்கில் புறப்பாடாகிறார்.

### சேவை செய்யும் தூய உள்ளங்கள்:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் செவிலியர் தின வாழ்த்து

சென்னை, மே 13-

**தன் எதிரில் உள்ள மனிதரின் பாலினம், சமூகத் தகுதி, சாதி, மதம், நிறம் பற்றி சிந்திக்காமல், அனைவருக்கும் சிகிச்சை வழங்கி ஆதரிக்கும் தூய உள்ளங்களுக்கு, உலக செவிலியர்நாள் வாழ்த்துகள் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.**

இதுதொடர்பாக தமிழக முதல்வர் தனது சமூகவலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "தன் எதிரில் உள்ள மனிதரின் பாலினம், சமூகத் தகுதி, சாதி,மதம், நிறம் என எதைப் பற்றியும் சிந்திக்காமல் அனைவரையும் ஒன்றுபோலக் கருதி, அன்புடன் சிகிச்சை வழங்கி ஆதரிக்கும் தூய உள்ளங்களான செவிலியர்கள் அனைவருக்கும் உலக செவிலியர் நாள் வாழ்த்துகள்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் நினைவாக - 'விளக்கேந்திய மங்கை' என்று உலகம் முழுவதும் போற்றப்படும் ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரே, செவிலியர் சேவையின் முன்னோடி. இவர் இத்தாலி நாட்டின் ஃபிளாரன்ஸ் நகரில் செல்வச் செழிப்புமிக்க உயர்குடும்பத்தில் பிறந்தவர். 'இறைவனால் தனக்கு விதிக்கப்பட்ட பணியாகவே' எண்ணி செவிலியர் பணியை சேவைமனப்பான்மையுடன் செய்தார்.

ஐரோப்பாவில் நடைபெற்ற க்ரீமியன் போரில் இரவு வேளைகளிலும் கையில் விளக்கை ஏந்திதேடிச் சென்று சேவை புரிந்தார். அவரின் நினைவாக, அவர் பிறந்தநாளான மே 12-ம் நாள் 'சர்வதேசசெவிலியர் தினமாக' கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

### பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்:

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நீலகிரியில் உற்சாக வரவேற்பு

ஊட்டி, மே 13-

**பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க நீலகிரி சென்று முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அங்கு தி.மு.க.வினர், பொதுமக்கள் திரண்டு வந்து உற்சாகமாக வரவேற்றனர்.**

**ரோஜா பூங்காவில்...**

நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் தோட்டக்கலைத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் கோடைவிழா நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான கோடைவிழா கடந்த 3-ம் தேதி கோத்தகிரி நேரு பூங்காவில் காய்கறி கண்காட்சியுடன் தொடங்கியது. அதனை தொடர்ந்து கூடலூரில் வாசனை திரவிய கண்காட்சி நடந்து முடிந்துள்ளது. ஊட்டி ரோஜா பூங்காவில் கடந்த சனிக்கிழமை தொடங்கிய ரோஜா கண்காட்சி நிறைவடைந்தது.

**11 நாட்கள் நடக்கிறது....**

கோடைவிழாவின் சிகர நிகழ்ச்சியாக ஊட்டி அரசினர் தாவரவியல் பூங்காவில் நடக்கும் மலர் கண்காட்சி உள்ளது. சர்வதேச அளவில் புகழ் பெற்ற மலர் கண்காட்சி வருகிற 15-ம் தேதி ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் தொடங்குகிறது. 15-ம் தேதி தொடங்கி வருகிற 25-ம் தேதி வரை 11 நாட்கள் நடக்க உள்ளது. மலர் கண்காட்சியை தொடங்கி வைப்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் 5 நாட்கள் சுற்றுப்பயணமாக நேற்று ஊட்டி சென்றார்.

**உற்சாகமாக வரவேற்பு...**

இதற்காக அவர் நேற்று காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையம் வந்தார். அங்கு கோவை மாவட்ட தி.மு.க.வினர் திரண்டு வந்து முதல்வரை மேள, தாளங்கள் முழங்க உற்சாகமாக வரவேற்றனர்.



அவர்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அங்கிருந்து காரில் நீலகிரிக்கு புறப்பட்டார். முதல்வர் சாலை மார்க்கமாக மேட்டுப்பாளையம், கோத்தகிரி வழியாக நீலகிரி மாவட்டம் ஊட்டிக்கு பயணமானார். ஊட்டிக்கு வந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நீலகிரி மாவட்ட தி.மு.க சார்பில் கோத்தகிரி, கட்டப்பெட்டு, ஊட்டி சேரிங்கிராஸ் உள்ளிட்ட பகுதிகளில் சாலையின் இருபுறமும் ஆயிரக்கணக்கான தி.மு.க.வினர், பொதுமக்கள் திரண்டு வந்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

**பழங்குடியின மக்கள்...**

முதல்வரும் காரில் இருந்தவாறு பொதுமக்களையும், கட்சியினரையும் பார்த்து கையசைத்தபடியே சென்றார். வரவேற்பு முடிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஊட்டியில் உள்ள தமிழகம் விருந்தினர் மாளிகைக்கு சென்றார். அங்கு தங்கி ஓய்வெடுத்தார். ஊட்டியில் இருக்கும் நாட்களில் அவர் சில அரசு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க உள்ளார். அதன்படி பொதுமக்களுக்கு பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று பட்டா வழங்குகிறார். இதுதவிர பழங்குடியின மக்களையும் சந்தித்து பேச உள்ளதாக கூறப்படுகிறது.

**127-வது மலர் கண்காட்சி...**

வருகிற 15-ம் தேதி ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் புகழ்பெற்ற 127-வது ஊட்டி மலர் கண்காட்சியை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். தொடர்ந்து பூங்காவில் வைக்கப்பட்டுள்ள மலர் அலங்காரங்கள், பூத்து குலுங்கும் மலர்களையும் பார்வையிடுகிறார். ஊட்டி நிகழ்ச்சிகளை முடித்து கொண்டு வருகிற 16-ம் தேதி(வெள்ளிக்கிழமை) ஊட்டியில் இருந்து கோவை வந்து, அங்கிருந்து விமானம் மூலமாக சென்னை திரும்புகிறார்.

**தீவிர பாதுகாப்பு....**

முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகையை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு உத்தரவின் பேரில் மாவட்டம் முழுவதும் 1000 போலீசார் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக ஊட்டி தமிழகம் விருந்தினர் மாளிகை, முதல்வர் மு.க.ஸ்டாலின் செல்லும் இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு, போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

### பஹல்காம் தாக்குதலுக்கு இந்தியாவின்

# பதிலடியால் பாகிஸ்தான் விரக்தி

### நாட்டு மக்களிடம் பிரதமர் மோடி உரை

புதுடெல்லி, மே 13-

**ஆபரேஷன் சிந்தூர் பதிலடியால், பாகிஸ்தான் இன்று விரக்தியின் உச்சத்தில் உள்ளது என்று பிரதமர் மோடி பேசியுள்ளார்.**

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த மாதம் 22-ம் தேதி சுற்றுலாவாசிகள் பொழுது போக்கி கொண்டிருந்தபோது, ஆயுதம் ஏந்திய பயங்கரவாதிகள் சிலர் வந்தனர். அவர்கள் ஆண்களாக குறி வைத்து சுட்டு வீழ்த்தினர். அதிலும், சந்தேகம் தீர சிலரிடம் உங்களுடைய மதம் என்னவென்று கேட்டு விட்டு தாக்குதல் நடத்தி உள்ளனர். இந்த பயங்கரவாத தாக்குதலில் நேபாள நாட்டை சேர்ந்த சுற்றுலாவாசி உள்பட 26 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இரு வார நிசப்தத்திற்கு பின்னர், இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியா ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலை முன்னெடுத்தது.

இதில், பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள 9 பயங்கரவாத கட்டமைப்புகள் இலக்காக கொள்ளப்பட்டன.

இந்திய ஆயுத படைகள் கடந்த 6-ம் தேதி, பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத கட்டமைப்புகளையும், பயங்கரவாதிகளையும் குறி வைத்து தாக்கியது.

இதில், பயங்கரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக, பாகிஸ்தான் தரப்பில் இருந்து டிரோன்கள் உள்ளிட்ட ஆயுதங்களை கொண்டு இந்தியா மீது தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும், அவற்றை இந்தியா முறியடித்தது. இதனால் இரு நாடுகளுக்கு இடையே போர் பதற்றம் ஏற்பட்டது. 4 நாட்களுக்கு நீடித்த இந்த போர் பதற்றம், பின்னர் ஒரு முடிவுக்கு வந்தது. இரு நாடுகளுக்கு இடையே போர் நிறுத்தமும் ஏற்பட்டது. எனினும், எல்லை பகுதியில் தொடர்ந்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் நடத்தப்பட்டு, நாட்கள் சென்ற நிலையில் முதன்முறையாக, பிரதமர் மோடி நேற்றிரவு 8 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அவர் உரையை தொடங்கி பேசும்போது, நாட்டின் படைகளுக்கும், உளவு துறைகளுக்கும், விஞ்ஞானிகளுக்கும் நான் தலை வணங்குகிறேன். நம்முடைய வீர படைகளின் வீரத்துக்கு நான் தலை வணங்குகிறேன். நாட்டின் திறன் கடந்த சில நாட்களில் உறுதியுடன் வெளிப்பட்டு உள்ளது என்றார். ஆபரேஷன் சிந்தூர் வெற்றி பெற ஆதரவாக நின்ற மக்களுக்கு நன்றி. அனைத்து தாய்மார்களுக்கும், சகோதரிகளுக்கும், மகள்களுக்கும் இந்த வெற்றியை அர்ப்பணிக்கிறேன். பஹல்காம் தாக்குதல் மிகுந்த மனவலியை ஏற்படுத்தியது. பயங்கரவாதிகள் கருணையின்றி சுற்றுலா பயணிகளை படுகொலை செய்தனர். குடும்பத்தினரின் கண் முன்னே அப்பாவி சுற்றுலா பயணிகள் சுட்டு கொல்லப்பட்டனர். காஷ்மீரில் நடந்த இந்த தாக்குதல் மக்களை கலக்கமடைய செய்தது. இதற்கான இந்தியாவின் பதிலடி முற்றிலும் நியாயம் வாய்ந்தது. அனைத்து சமூகமும், அரசியல் கட்சிகளும் ஒரே குரலில் இந்தியாவுக்கு ஆதரவாக நின்றன. கடந்த 6-ந்தேதி நமது மன உறுதியின் விளைவை உலகம் பார்த்தது. ஆபரேஷன் சிந்தூர் என்பது வெறும் பெயர் இல்லை. இந்த பதிலடி பெண்களின் குங்குமத்திற்கு கிடைத்த வெற்றி. உலக பயங்கரவாதத்தின் தலைமை மையங்கள் தகர்க்கப்பட்டு உள்ளன என கூறியுள்ளார். இதனால், பாகிஸ்தான் இன்று விரக்தியின் உச்சத்தில் உள்ளது என்று கூறியுள்ளார்.

# பிளஸ்-2 விடைத்தாள் நகல் பெற இன்று முதல் விண்ணப்பிக்கலாம்

### தேர்வுத்துறை அறிவிப்பு

சென்னை, மே 13-

**பிளஸ்-2 தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட நிலையில் விடைத்தாள் நகலுக்கு இன்று முதல் மாணவ-மாணவிகள் விண்ணப்பிக்கலாம் என்று தேர்வுத்துறை அறிவித்துள்ளது.**


தமிழ்நாட்டில் பிளஸ்-2 பொதுத் தேர்வு கடந்த மார்ச் மாதம் 3-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை நடைபெற்றது. இந்தத் தேர்வை 3 லட்சத்து 78 ஆயிரத்து 545 மாணவர்கள், 4 லட்சத்து 24 ஆயிரத்து 23 மாணவிகள், 18 ஆயிரத்து 344 தனித் தேர்வர்கள், 145 சிறைவாசிகள் என மொத்தம் 8 லட்சத்து 21 ஆயிரத்து 57 பேர் எழுதினார்கள்.

தேர்வு முடிவுகள் கடந்த 8-ம் தேதி வெளிவந்தது. மொத்தம் 95.03 சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர். இந்த நிலையில், பிளஸ்-2 மாணவர்கள் உயர் கல்வியில் சேருவதற்கு வசதியாக தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்கள் இன்று வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, காலை 11 மணிக்கு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் தற்காலிக சான்றிதழ் பதிவிறக்கம் செய்யப்பட்டன. அதில், தலைமையாசிரியர் பள்ளியின் முத்திரையுடன் கையெழுத்திட்டு மாணவர்களுக்கு வழங்கினார்.

இதற்கிடையே, பிளஸ்-2 விடைத்தாள் நகல் பெற இன்று (செவ்வாய்கிழமை) முதல் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தாங்கள் படித்த பள்ளிகளின் மூலமாகவும், தனித் தேர்வர்கள் தாங்கள் தேர்வு எழுதிய மையங்கள் வழியாகவும் இன்று முதல் 17-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். இதற்கு கட்டணமாக அனைத்து பாடங்களுக்கும் ரூ.275 செலுத்த வேண்டும். நகல் பெற்றவுடன் மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் தேர்வுத் துறை தெரிவித்துள்ளது.


**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| 2,975.43 | 916.70 |
| பாயின்ட் 82,429.90 | பாயின்ட் 24,924.70 |



**தங்கம்**
1 சவரன் ₹70,000
1 கிராம் ₹8,750





**வெள்ளி**
1 கிலோ ₹110,000
1 கிராம் ₹110.00

**டாலர்** ₹84.90

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

முடிவுக்கு வந்தது வர்த்தக போர்:

# பரஸ்பர வரிகளை குறைக்க சீனா, அமெரிக்கா ஒப்புதல்

**வாஷிங்டன், மே 13-**

வர்த்தக போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையிலும், 90 நாட்களுக்கு பரஸ்பர வரிகளை அமெரிக்கா, சீனா ஆகிய இருநாடுகளும் திரும்ப பெற ஒப்புக்கொண்டனர். அதேநேரத்தில் பரஸ்பர வரிகளை குறைக்க இரு நாடுகளும் ஒப்புதல் அளித்துள்ளது.

அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவி ஏற்ற போதே தங்களுக்கு வரி விதிக்கும் நாடுகளுக்கு அதே அளவு வரி விதிக்கப்படும் என்று எச்சரித்தார். அடுத்தடுத்து சீனாவுக்கு வரி மேல் வரி போட்டார். சீனாவும் பதிலுக்கு வரி போட துவங்கியது. இதனால் அமெரிக்கா சீனாவின் பொருட்களுக்கு இறக்குமதி வரியை 145% ஆக அதிகரித்தது.



சீனாவும் அமெரிக்க பொருட்களுக்கான இறக்குமதி வரியை, 125 சதவீதமாக உயர்த்தியது. இதனால் இரு நாடுகளுக்கு இடையே வர்த்தக போர் உச்சத்தில் இருந்தது. இந்நிலையில், தற்போது வர்த்தக போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையிலும், 90 நாட்களுக்கு பரஸ்பர வரிகளை திரும்ப பெற சீனா, அமெரிக்கா ஆகிய இருநாடுகளும் ஒப்புக்கொண்டன.

மேலும், அமெரிக்கா சீனப் பொருட்களுக்கான வரிகளை 145 சதவீதத்தில் இருந்து, 30 சதவீதமாக குறைக்கவும், சீனா அமெரிக்க பொருட்களுக்கான இறக்குமதி வரியை 125 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக குறைக்கவும் முடிவு செய்துள்ளது.

இந்த முடிவு, சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடந்த வர்த்தகம் தொடர்பான கூட்டத்தில் எடுக்கப்பட்டு உள்ளது.

ஆப்கானிஸ்தானில்

# செஸ் விளையாட்டுக்கு தலிபான்கள் திடீர் தடை

**காபூல், மே 13-**

ஆப்கானிஸ்தானில் செஸ் விளையாட்டை தடை செய்வதாக தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் கடந்த 2021-ல் வெளியேறின. அதன் பின்னர் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். இதனையடுத்து, பெண் கல்வி, பெண் சுதந்திரம் பேணப்படும் என்றும், உலக நாடுகளுடன் நட்புறவு ஏற்படுத்தப்படும் என்றும் அவர்கள் உறுதியளித்தனர். ஆனால், அந்த அறிவிப்புக்கு மாறாகவே பல்வேறு சட்டங்களை அமல்படுத்தி வருகின்றனர்.

அந்த வகையில், ஆப்கானிஸ்தானில் செஸ் விளையாட்டை தடை செய்வதாக தலிபான்கள் அறிவித்துள்ளனர். மே-11 ஆம் தேதி இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மத கலாசாரத்திற்கு எதிராக இந்த விளையாட்டு இருப்பதாக புகார்கள் எழுந்தது. இந்நிலையில், இந்த விஷயத்தை மறுபரிசீலனை செய்து ஒப்புதல் கொடுக்கும் வரை தடை உத்தரவு அமலில் இருக்கும் என்றும் கூறியிருக்கின்றனர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள அனைத்து விளையாட்டு நிகழ்வுகளையும் ஒழுங்குபடுத்தும் தலிபானின் விளையாட்டு இயக்குநரகம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. ஷரியா சட்டத்தின்படி செஸ் விளையாட்டு சூதாட்டமாகக் கருதப்படுவதாக கூறப்படுகிறது.



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கோவலத்தில் நடைபெற்ற இந்திய தேசிய லீக் மாநில தலைவர் எம்.பஷீர் அஹமது மகன் டாக்டர் பி.ஜாபர் ஷெரீப் - டாக்டர் ஏ.நூருல் அய்னா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.

# செவிலியர்களுக்கு இ.பி.எஸ். வாழ்த்து

**சென்னை, மே 13-**

செவிலியர் தினத்தையொட்டி அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தியில், தன்னலம் துளியும் பாராமல் எல்லோரையும் உன்னத சேவையால் அரவணைத்து, கஷ்டத்திலும் கருணை காட்டி, தளர்விலும் தன்னம்பிக்கை காட்டி, ஆண் - பெண் வேறுபாடின்றி, சேவை மட்டுமே முதன்மையாக கொண்டு தொண்டாற்றும் செவிலியர் அனைவருக்கும், செவிலியர் தின நல்வாழ்த்துகள். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# பல அடுக்குகளும் நுட்பங்களும் கொண்ட பாதுகாப்பு அமைப்பு

## லெஃப்டினண்ட் ஜெனரல் ராஜீவ் கயி விளக்கம்

**புதுதில்லி, மே 13-**

பல அடுக்குகளில் ஒன்றைத் தாக்கினால் மற்றொன்று எதிரியை தாக்கும் அளவுக்கு பல அடுக்குகளும் நுட்பங்களும் கொண்ட வான் பாதுகாப்பை அமைப்பைக் கொண்டிருக்கிறோம் என்று இந்திய ராணுவ தலைமை இயக்குநர் லெஃப்டினண்ட் ஜெனரல் ராஜீவ் கயி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கை குறித்து தலைமை இயக்குநர் லெஃப்டினண்ட் ஜெனரல் ராஜீவ் கயி நேற்று செய்தியாளர் சந்திப்பில் விமானப் படை நடவடிக்கைகளின் தலைமை இயக்குநர் ஏர் மார்ஷல் ஏ. கே. பாரதி, கடற்படை நடவடிக்கைகளின் தலைமை இயக்குநர் வைஸ் அட்மிரல் ஏ. என். பிரமோத் ஆகியோருடன் சேர்ந்து விவரித்தார்.



அப்போது ராஜீவ் கயி கூறியதாவது, கடந்த ஒரு சில ஆண்டுகளில் பயங்கரவாதத் தன்மையே மாறியிருக்கிறது. பஹல்காம் சுற்றுலா பயணிகள் மீதும், ஆன்மிக சுற்றுலா சென்றோர் மீதும் தாக்குதல் நடத்தியிருப்பதே அதற்கு உதாரணமாக உள்ளது. பாகிஸ்தானில் இருந்துதான் தாக்குதல் வரும் என்பதால் அதற்கேற்ப வான் பாதுகாப்பு அமைப்பு தயார் நிலையில் இருந்தது.

பல அடுக்குகளில் ஒன்றை தாக்கினால் மற்றொன்று எதிரியை தாக்கும். எனவே, அந்த அடிப்படையில்தான், பல அடுக்கு பாதுகாப்பு அமைப்பு அனைத்து ட்ரோன்களையும் ஏவுகணைகளையும் வெற்றிகரமாக வீழ்த்தியது. முப்படைகளிடையே மிக உறுதியான ஒற்றுமையும் ஒருங்கிணைப்பும் இருந்தது. இதுதான் தாக்குதல் உக்தியாகவும் இருந்தது. 140 கோடி இந்தியர்களும் எங்களுக்கு துணை நின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. கூட்டணிக்கு நடிகர் விஜய் வருவாரா?

## நயினார் நாகேந்திரன் பதில்

**நாகர்கோவில், மே 13-**

பா.ஜ.க. கூட்டணிக்கு விஜய் வருவாரா? என்பது குறித்து நயினார் நாகேந்திரன் பதில் அளித்துள்ளார்.

நாகர்கோவிலில் தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- தி.மு.க. ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகள் முடிவடைந்துள்ளது. ஆனால் அவர்கள் தேர்தல் அறிக்கையில் கூறிய எதையும் சரியாக நிறைவேற்றவில்லை. ஆயிரம் ரூபாய் தருவதாக கூறினார்கள். ஆனால் 2½ ஆண்டுகளுக்கு பிறகு தான் கொடுத்தார்கள். வீட்டு வரி, சொத்து வரி அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதை மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத சூழல் உள்ளது.

வெகு விரைவில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று மக்கள் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். தேர்தல் வரும், மாற்றமும் வரும். தி.மு.க. ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு கெட்டுப்போய் உள்ளது. தற்போதைய சூழலில் தேச விரோத செயலாக நாட்டுக்கு எதிராக பேசியவர்கள் மீது தமிழகத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தேர்தல் கூட்டணி தொடர்பாக இன்னும் கால அவகாசம் உள்ளது. நிறைய கட்சிகள் எங்களது கூட்டணிக்கு வருவார்கள். நடிகர் விஜய் கூட்டணிக்கு வரவேண்டும் என்று நான் சொல்லவில்லை. எல்லா கட்சியும் ஓரணியில் சேர வேண்டும் என்று சொல்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# ஒரே நாளில் 2 முறை குறைந்த தங்கம் விலை

**சென்னை, மே 13-**

தமிழகத்தில் ஆபரணத் தங்கத்தின் விலையில் இருமுறை சரிவு காணப்பட்டது. நேற்று ஒரேநாளில் சவரன் ரூ.2360 குறைந்து விற்பனையானது.

தமிழகத்தில் ஆபரணத் தங்கத்தின் விலையில் அண்மைக்காலமாக ஆச்சரிய மாற்றங்கள் காணப்படுகின்றன. விலை நிலவரத்தில் ஏற்றம், இறக்கங்கள் நிலவுவதே அதற்கு காரணம். இந்நிலையில் நேற்று மட்டும் ஆபரணத் தங்கத்தின் விலையில் இருமுறை சரிவு காணப்பட்டது. காலையில் ஒரு சவரன் ரூ.1320 குறைந்து ரூ.71,040க்கு விற்பனையானது. ஒரு கிராம் ரூ.8880 ஆக இருந்தது.

நேற்று மாலையிலும் தங்கம் விலை சரிந்து விற்பனையானது. அதன்படி, இரண்டாவது முறையாக நேற்று ஒரே நாளில் மேலும் ரூ.1040 குறைந்து, சவரன் ரூ.70,000க்கும், ஒரு கிராம் ரூ.8750க்கும் விற்பனையானது. சர்வதேச சந்தையில் கடும் விலை சரிவை தொடர்ந்து சென்னையில் தங்கம் விலை அதிரடியாக குறைந்துள்ளதாக நகை வியாபாரிகள் கூறி உள்ளனர். இந்த விலை மாற்றம், அடுத்து வரக்கூடிய நாட்களில் எப்படி இருக்கும் என்பது போக போக தெரிய வரும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

திருமண நிகழ்வில் சோகம்:

# காந்தாரா பட நடிகர் திடீர் மரணம்

**கார்கலா, மே 13-**

திருமண விழாவின் போது பிரபல கன்னட நடிகர் மாரடைப்பால் உயிரிழந்தது பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

கன்னட திரையுலகின் பிரபல நடிகர் ராகேஷ் புஜாரி (33). காமெடி கிலாடி சீசன் 3 ஷோவின் வெற்றியாளர். காந்தாரா படத்தில் முக்கிய வேடத்தில் நடித்தவர். காந்தாரா படத்தின் 2ம் பாகத்திலும் தற்போது நடித்து வருகிறார். உடுப்பியில் திருமண விழா ஒன்றில் ராகேஷ் புஜாரி கலந்து கொண்டிருந்தார். விழாவில் தமது நண்பர்களுடன் அவர் மேடையில் உற்சாகம் பொங்க, நடனம் ஆடிக் கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராத விதமாக நெஞ்சை பிடித்தபடியே சரிந்து விழுந்தார். இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அங்குள்ளோர் ராகேஷை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் மாரடைப்பு ஏற்பட்டு இறந்துவிட்டதாக கூறினர். ராகேஷ் புஜாரியின் மறைவை அறிந்த கன்னட சினிமா பிரபலங்கள் இரங்கலை தெரிவித்துள்ளனர்.

சட்ட விரோதமாக குடியிருப்பு:

# கோவையில் 2 வங்கதேசத்தினர் கைது

**கோவை, மே 13-**

கோவையில் சட்ட விரோதமாக தங்கிய வங்கதேசத்தினர் இருவரை போலீஸார் கைது செய்தனர். மேலும் 10 பேரிடம் போலீஸார் விசாரணை செய்து வருகின்றனர்.


கோவை மாநகர காவல் எல்லைக்கு உட்பட்ட துடியலூரை அடுத்த தொப்பம்பட்டியில் தனியார் நிறுவனம் ஒன்று இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் ஏராளமான ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில், இந்த நிறுவனத்தில் வங்கதேச நாட்டைச் சேர்ந்த இருவர் தங்கியிருப்பதாக மாநகர போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன் பேரில், துடியலூர் போலீஸார், மேற்கண்ட நிறுவனத்துக்கு சென்று அங்கு பணியாற்றும் ஊழியர்களிடம் விசாரணை நடத்தினர். அப்போது இருவரின் செயல்பாடுகளில் சந்தேகம் ஏற்பட்டது. இதையடுத்து போலீஸார் அவர்களைப் பிடித்து காவல் நிலையத்துக்கு அழைத்து வந்து விசாரித்தனர்.

விசாரணையில் பிடிபட்டவர்கள் தாங்கள் மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், முன்னுக்கு பின் முரணான தகவல்களை தெரிவித்தனர். போலீஸாரின் தீவிர விசாரணையில் பிடிபட்டவர்கள் வங்கதேச நாட்டைச் சேர்ந்த லோடிப் அலி (29), சொரிப்(37) எனத் தெரிந்தது. இவர்கள் வங்கதேச நாட்டில் இருந்து சட்ட விரோதமாக ஊடுருவி மேற்கு வங்க மாநிலத்துக்கு வந்தவர்கள் என்றும், பின்னர் அங்கிருந்து வேலைக்காக கோவைக்கு வந்ததும் தெரிய வந்தது.

இதையடுத்து இருவரையும் போலீஸார் கைது செய்தனர். மேலும், இவர்களுடன் மேற்குவங்க மாநிலத்தைச் சேர்ந்த 10 பேர் தங்கியிருந்தனர். அவர்களைப் பிடித்து, அவர்கள் உண்மையிலேயே மேற்குவங்க மாநிலத்தைச் சேர்ந்தவர்களா?, இவர்களுக்கு பின்னணியில் யார் உள்ளனர்?, எவ்வாறு இவர்கள் ஊடுருவி கோவைக்கு வந்தனர்? என்பன போன்ற தகவல்கள் குறித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

**13-05-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** தெய்வப் பிரார்த்தனைகள் மூலம் தொழில் அபிவிருத்திக்கான திட்டங்கள் ஈடேறும். நினைத்தபடி எதுவும் நடக்காது. வாழ்க்கையில் தேவையற்ற புது திருப்பங்கள் ஏற்படும்.

**ரிஷபம்:-** புதிய திருப்பங்கள் ஏற்பட்டு எதிர்காலம் ஒளிமயமாக அமையும். புதிய பணிக்கான அரசு உத்திரவுகள் வரலாம். மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்:-** அரசால் அனுகூலங்கள் உண்டு. காதல் வெற்றி களிப்பை தரும். மனைவி மூலம் நன்மையும், மகிழ்ச்சியும் பெருகும். அதிகாரிகளிடம் பணிவோடு நடந்தால், பயன்கள் அதிகரிக்கும்.

**கடகம்:-** குழந்தைகள் மூலம் நிம்மதி குறையும். தங்கள் திறமைக்கு மதிப்பு இருக்காது. அக்கம் பக்கத்தாரோடு அனுசரித்துச் செல்வது நல்லது. பயணங்கள் சுகமாக அமையாது.

**சிம்மம்:-** வீட்டில், எங்கே நிம்மதி எனத் தேட வேண்டியதிருக்கும். பொருட்களைப் பத்திரமாகப் பாதுகாக்க விழிப்புடன் இருக்கவும். வியாபாரிகளுக்கு பணவரவு ஏற்ற இறக்கமாக இருக்கும்.

**கன்னி:-** தொழிலில் தனவரவு தொடரும் நாள். புத்தாடை, ஆபரணம் புதிதாகச் சேரும் நாள். எல்லா நலமும் பெருகும், ஏற்றமிகு நாள். பெயரும், புகழும் உயர்ந்து பெருமை தரும் நாள்.

**துலாம்:-** சுமாரான தனவரவு இருக்கும். மன அழுத்தம் அதிகரிக்கும். காரியத்தடைகள், கௌரவக் குறைவு, எல்லை மீறிய செலவுகள் ஆகியவை ஏற்படலாம்.

**விருச்சிகம்:-** பலவழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். அறிவு விருத்தியாகி முன்னேற்றம் ஏற்படும். புதுப்புது சிந்தனைகள் தோன்றும். குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**தனுசு:-** அரசுப் பணியாளர்களுக்கு இடமாற்றங்கள் இருக்கலாம். பெண்களால் விரயச் செலவுகள் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் இனிமையாக பேசினால் இலாபம் அதிகரிக்கும்.

**மகரம்:-** பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்து மகிழ்வர். பிறருக்கு உதவுவதில் சந்தோஷமடைவர். வியாபாரத்தில் புதிய யுக்திகளை புகுத்தி அதிக இலாபம் சம்பாதிப்பது உறுதி.

**கும்பம்:-** புதிய வேலை வாய்ப்பின் காரணமாக ஒளிமயமான எதிர்காலம் தெரியும். தேர்வுக்கு அதிகமாக உழைத்து அதிக மதிப்பெண் வாங்க முயல்வீர்கள். வியாபாரத்தில் முன்னேற்றம் தெரியும்.

**மீனம்:-** தொழில் விஷயங்களில் அரசால் நன்மை ஏற்படும். மனதில் அமைதி நிலவ, தெய்வீகத் திருப்பணிகளில் ஈடுபடுவீர்கள். உல்லாசப் பயணங்கள் மூலம் உள்ளம் மகிழும்.

கனமழையால் வெள்ளப்பெருக்கு:

# காங்கோவில் 100-க்கும் மேற்பட்டோர் பலி

**நங்கன்ஜா, மே 13-**

காங்கோவில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 100-க்கும் மேற்பட்டோர் பலியானதாக அந்த நாட்டு அரசு தகவல் தெரிவித்துள்ளது.

மத்திய ஆப்பிரிக்க நாடான காங்கோ ஜனநாயகக் குடியரசின் தெற்கு கிவு மாகாணத்தில் உள்ள ஃபிஸியில் தொடர்ந்து இரண்டு நாள்களாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக நங்கன்ஜா நகரில் உள்ள டாங்கன்யிகா உள்பட பல ஏரிகள் நிரம்பின. தொடர்ந்து பெய்த கனமழையால் அந்த ஏரியின் கரைகள் உடைந்துள்ளன.

இதனால் கசாபா கிராமத்தை வெள்ளம் சூழ்ந்தது. திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் சுமார் 150 வீடுகள் இடிந்து விழுந்ததாகவும், வெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 100-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும் அந்த நாட்டு அரசு தகவல் தெரிவித்துள்ளது. இதனையடுத்து மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு, படகுகள் மூலம் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றினர். தொடர்ந்து பெய்துவரும் கனமழைக்கு மத்தியில் நீரினால் ஏற்படும் நோய்த்தொற்றுகளால் மக்கள் பாதிக்கப்படுவதாகவும், ஊட்டச்சத்துக் குறைபாடு போன்ற ஆபத்து அதிகரித்து வருவதாகவும் மாகாண அரசு ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் விவகாரம்:

# பலுசிஸ்தான் கிளர்ச்சிப் படை இந்திய ராணுவத்துக்கு ஆதரவு

**இஸ்லாமாபாத், மே 13-**

பாகிஸ்தானை இந்தியா தாக்கினால், நாங்கள் இந்திய ராணுவத்திற்கு உதவியாக செயல்படுவோம் என 'பலுசிஸ்தான் விடுதலை ராணுவம்' என்ற கிளர்ச்சிப் படை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் தென் மேற்கு பிராந்தியமான பலுசிஸ்தானை தனி நாடாக அறிவிக்கக்கோரி, நீண்ட காலமாக போராட்டம் நடக்கிறது. பலுசிஸ்தானில், பாக்., ராணுவம் மீது, 'பலுசிஸ்தான் விடுதலை ராணுவம்' என்ற கிளர்ச்சிப் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

பலுசிஸ்தானின் பல பகுதிகளை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியதோடு, அரசு அலுவலகங்களில் பாக்., கொடியை அகற்றி விட்டு பலுசிஸ்தான் கொடியை ஏற்றியுள்ளனர். தங்களை தனி நாடாக அங்கீகரிக்கும்படி, இந்தியா மற்றும் ஐ.நா.,வுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், பாகிஸ்தானை இந்தியா தாக்கினால், நாங்கள் இந்திய ராணுவத்திற்கு உதவியாக செயல்படுவோம் என 'பலுசிஸ்தான் விடுதலை ராணுவம்' என்ற கிளர்ச்சிப் படை தெரிவித்துள்ளது.

இது குறித்து பலுசிஸ்தான் கிளர்ச்சிப் படை வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

பாகிஸ்தானின் பயங்கரவாத அரசை ஒழிப்பதற்கான இறுதி முடிவை இந்தியா எடுக்க வேண்டும். மேற்கு எல்லையில் இருந்து பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்த பலுசிஸ்தான் கிளர்ச்சிப் படை தயாராக இருக்கிறது என்று நாங்கள் உறுதியளிக்கிறோம்.

இந்தியா பாகிஸ்தானைத் தாக்கினால், இந்தியாவின் ராணுவத்திற்கு உதவியாக செயல்படுவோம். இவ்வாறு தெரிவித்துள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

கூவாகம் திருவிழா 2025:

# தூத்துக்குடியை சேர்ந்த சக்தி 'மிஸ் திருநங்கை' ஆக தேர்வு

**விழுப்புரம், மே 13-**

விழுப்புரத்தில் நடைபெற்ற விழாவில் 'மிஸ் திருநங்கை' பட்டத்தை தூத்துக்குடியைச் சேர்ந்த சக்தி என்ற திருநங்கை பெற்றார்.

தேசிய திருநங்கைகள் கூட்டமைப்பு மற்றும் தொண்டு நிறுவனங்கள் சார்பில் 'கூவாகம் திருவிழா - 2025' விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள நகராட்சி திடலில் நேற்று முன்தினம் (மே 11) இரவு நடைபெற்றது.



முன்னிஜி நாயக் தலைமை வகித்தார். முன்னாள் நகராட்சி சேர்மன் ஜனகராஜ் முன்னிலை வகித்தார். குத்துவிளக்கு ஏற்றி வைத்து ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான் தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் பேசும் போது, "ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விழாக்கள் சிறப்பாக நடைபெறும். அதேபோன்று ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்டத்தில் கூத்தாண்டவர் கோயில் திருவிழா நடைபெற்றது. மாவட்டம் பிரிந்த பிறகும், தொடர்ந்து நடைபெறுவது விழுப்புரம் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கிறது.

பிற மாவட்டங்கள், மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளில் இருந்து வருகை தந்துள்ள திருநங்கையர்களை அன்புடன் வரவேற்கிறோம். மகிழ்ச்சியுடன் நிகழ்ச்சியில் பங்கேற்று கூத்தாண்டவர் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்ய வாழ்த்துகள்" என்றார். பின்னர் அவர், திருநங்கைகள் சார்பில் விழுப்புரம் நகராட்சி முன்னாள் சேர்மன் ஜனகராஜுக்கு 'மக்கள் தொண்டன்' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார். இதையடுத்து, திருநங்கைகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

# எடப்பாடி பழனிசாமி பிறந்தநாள்: அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து

சென்னை, மே 13-

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும் எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி நேற்று தனது 71-வது பிறந்தநாளை கொண்டாடினார்.

இதையொட்டி அவருக்கு அரசியல் கட்சித்தலைவர்கள், கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் என பலரும் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்த நிலையில் பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், தமிழக முன்னாள் முதல்வரும், அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி முழு ஆரோக்கியத்துடனும், நீண்ட ஆயுளுடனும் தொடர்ந்து மக்கள் சேவை புரிய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், அண்ணன் எடப்பாடி பழனிசாமி நல்ல உடல் நலத்துடன், நீண்ட ஆயுளுடன் தங்களது மக்கள் பணிகள் தொடர, இறைவனை வேண்டிக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.



நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள்! நாம் தமிழர் கட்சி சார்பாக நான் முன் வைத்த கோரிக்கையை ஏற்று தைப்பூசத்திற்குப் பொது விடுமுறை அளித்தது. அழிவின் விளிம்பிலிருந்த காவிரிப் படுகை மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலங்களாக அறிவித்தது, நீட் தேர்வு பாதிப்புகளிலிருந்து கிராமப்புற ஏழை அரசுப்பள்ளி மாணவர்களை ஓரளவாவது பாதுகாக்கும் வகையில் 7.5% இடஒதுக்கீடு வழங்கியது, தமிழ்நாட்டிற்கு 11 அரசு மருத்துவக்கல்லூரிகளைக் கொண்டுவந்தது என அரும்பணிகள் பல ஆற்றிய அவர், இன்னும் பல ஆண்டுகள் உடல் நலனுடனும், உள்ள மகிழ்வுடனும் நலமோடு வாழ்ந்து மக்கள் தொண்டாற்றிட என்னுடைய நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துகள்! இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்கள், நல்ல உடல் நலத்துடன், நீண்ட ஆயுளுடன் தனது மக்கள் பணிகள் தொடர, இறைவனை வேண்டிக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார். இந்நிலையில் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு செங்கோட்டையன் இனிய பிறந்தநாள் வாழ்த்துகள் என்று தெரிவித்து உள்ளார்.

# உ.பி.யில் பிறந்த 17 குழந்தைகளுக்கு ‘சிந்தூர்’ எனப் பெயரிட்ட பெற்றோர்

லக்னோ, மே 13-

இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் நிலவிவந்த நிலையில், உத்தரப் பிரதேசத்தில் பிறந்த 17 பெண் குழந்தைகளுக்கு அவரது குடும்பத்தினர் “சிந்தூர்” எனப் பெயரிட்டுள்ளனர்.

கடந்த மாதம் பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பழிவாங்கப் பாகிஸ்தானுக்கு எதிரான இந்தியாவின் ராணுவ தாக்குதலுக்கு “ஆபரேஷன் சிந்தூர்” எனப் பெயரிடப்பட்டது. ஆபரேஷன் சிந்துவால் ஈர்க்கப்பட்ட பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளுக்கும் சிந்தூர் என்று பெயரைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

அந்தவகையில், உ.பி.யில் மே 10, 11 ஆகிய தேதிகளில் குஷிநகர் மருத்துவக் கல்லூரியில் பிறந்த 17 பெண் குழந்தைகளுக்கு அவரது குடும்பத்தினர் “சிந்தூர்” எனப் பெயரிட்டுள்ளனர் என்று மருத்துவக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் ஆர். கே. ஷாஹி தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்குத் தக்க பதிலடி கொடுத்தற்காக இந்திய ஆயுதப்படைகளைப் பாராட்டிய குஷிநகரைச் சேர்ந்த அர்ச்சனா ஷாஹி தனது மகளுக்கு ராணுவ நடவடிக்கையின் பெயரான சிந்தூர் என வைத்துள்ளதாக பெருமிதம் அடைந்தார்.

அதேபோன்று பத்ரௌனாவைச் சேர்ந்த காஜல் குப்தாவும், தன் மகளுக்கு சிந்தூர் எனப் பெயரிட்டுள்ளார். இந்த ராணுவ நடவடிக்கையை நாங்கள் நினைவில் கொள்வது மட்டுமல்லாமல், இந்த நாளையும் கொண்டாடுவோம். “சிந்தூர்” எனப் பெயரிடுவது பெற்றோர்கள் கௌரமாகக் கருதுகின்றனர். அதேசமயம் அந்த பெயருக்குத் தைரியமானவள், எதிரிகளை அழிப்பவள் என்று அர்த்தமாகும்.

## நாட்டின் பாதுகாப்பிற்காக
# 10 செயற்கைக்கோள்கள் 24 மணி நேரமும் கண்காணிப்பு: இஸ்ரோ

புதுடெல்லி, மே 13-

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான மோதல் சற்று தணிந்திருக்கும் நிலையில், நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய 10 செயற்கைக்கோள்கள் 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருவதாக இஸ்ரோ தலைவர் வி. நாராயணன் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் ஏப்ரல் 22 ஆம் தேதி நடந்த பாகிஸ்தானின் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு, பதிலடியாக இந்தியா ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை மேற்கொண்டது. அதன் பிறகு பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைக்கு பின்னர், இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர் நிறுத்தம் தொடர்பாக கடந்த 10-ம் தேதி மாலை ஓர் உடன்பாடு எட்டப்பட்டது. தற்போது 19 நாட்கள் பதற்றத்துக்குப் பின் எல்லையில் மோதல்கள் அற்ற இரவு நீடித்ததாகவும், அமைதி திரும்பியுள்ளதாகவும் இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை மே-11 ஆம் தேதி இம்பாலில் உள்ள மத்திய வேளாண் பல்கலைக்கழகத்தின் 5-வது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய இஸ்ரோ தலைவர் வி. நாராயணன், “நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய 10 செயற்கைக்கோள்கள் 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

நமது அண்டை நாடுகளைப் பற்றி நீங்கள் அனைவரும் அறிவீர்கள். நமது அண்டை நாடுகளின் நடவடிக்கைகளை கண்காணிக்க வேண்டியது அவசியம். நமது நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென்றால், செயற்கைக்கோள்கள் மூலமாகவே நாம் கண்காணிக்க வேண்டும். தற்போது, நமது நாட்டின் 7,000 கிலோ மீட்டர் பரப்பளவு உள்ள கடல் எல்லையை செயற்கைக்கோள் வழியாகவே கண்காணித்து வருகிறோம். நமது செயற்கைக்கோள் மற்றும் ட்ரோன் தொழில்நுட்பம் இல்லாவிட்டால், பல்வேறு சாதனைகளை நாம் நிகழ்த்தியிருக்க முடியாது.” என்று தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்திய
# பொள்ளாச்சி பாலியல் வழக்கில் இன்று தீர்ப்பு

கோவை, மே 13-

தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்திய பொள்ளாச்சி பாலியல் வழக்கில் இன்று தீர்ப்பு வழங்கப்படுகிறது.

பொள்ளாச்சியில் நடந்த கூட்டு பாலியல் வழக்கு தமிழகத்தில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்திய வழக்குகளில் ஒன்று. ஒரு கல்லூரி மாணவி மற்றும் பெண்கள் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்து ஆபாச வீடியோ எடுத்து துன்புறுத்தப்பட்டனர்.

இதுதொடர்பான வீடியோ வெளியானதால் பெரும்பரபரப்பு ஏற்பட்டது. இந்த சம்பவம் கடந்த 2019-ம் ஆண்டு நடந்தது.

முதலில் இந்த வழக்கை பொள்ளாச்சி கிழக்கு போலீசார் விசாரித்தனர். பின்னர் சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரித்த நிலையில் வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றம் செய்யப்பட்டது. சி.பி.ஐ. அதிகாரிகள் அதிரடி விசாரணை மேற்கொண்டு திரு நாவுக்கரசு (வயது 25), சபரிராஜன் (25), சதீஷ் (28), வசந்தகுமார் (27), மணிவண்ணன் (28), ஹெரன் பால் (29), பாபு (27), அருளானந்தம் (34) மற்றும் அருண்குமார் ஆகிய 9 பேரை கைது செய்து ஜெயிலில் அடைத்தனர்.

இவர்கள் மீது 2019 மே 21-ந் தேதி கோவை மகளிர் கோர்ட்டில் சி.பி.ஐ. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது. அதன்பிறகு வழக்கு விசாரணை தாமதம் ஆனதைத்தொடர்ந்து ஐகோர்ட்டு உத்தரவின் பேரில் மகளிர் கோர்ட்டு நீதிபதி நந்தினி தேவி முன்னிலையில் கடந்த 2023 பிப்ரவரி 24-ந் தேதி சாட்சி விசாரணை தொடங்கியது. இந்த வழக்கில் சாட்சி விசாரணை, அரசு மற்றும் எதிர் தரப்பு இறுதிவாதம் முடிவடைந்தது.

இதையடுத்து வழக்கின் தீர்ப்பு மே 13-ந் தேதி அறிவிக்கப்படும் என நீதிபதி நந்தினி தேவி அறிவித்தார்.

தீர்ப்பு அறிவிக்கப்படும் என உத்தரவிடப்பட்டு இருப்பதால் குற்றவாளிகள் அனைவரும் இன்று (13-ந் தேதி) கோர்ட்டில் ஆஜர்படுத்தப் பட உள்ளனர்.

தீர்ப்பு விவரங்களை நாளை காலையோ அல்லது மதியத்துக்கு பிறகோ நீதிபதி அறிவிக்க வாய்ப்புள்ளதாக வக்கீல்கள் தெரிவித்தனர். இதையொட்டி நாளை கோவை கோர்ட்டு வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட உள்ளது.

# கள்ளழகரின் அருள் தேசத்துக்கு வளம், நல்லிணக்கத்தை கொண்டு வரட்டும்
## ஆளுநர் ஆர்.என்.ரவி வாழ்த்து

சென்னை, மே 13-

“கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் விழாவையொட்டி தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், “பிரசித்தி பெற்ற வைகை கள்ளழகர் திருவிழாவையொட்டி வாழ்த்துகள். கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வேளையில், நாம் பக்தி, கலாசாரம் மற்றும் தலைமுறைகளை ஒன்றிணைக்கும் ஒரு புனிதமான பாரம்பரியத்தை கொண்டாடுகிறோம். இந்த கொண்டாட்டம் நமது பாரம்பரியத்தின் வலிமையையும், காலத்தால் அழியாத ஒற்றுமையில் நம்மை ஒன்றிணைக்கும் உணர்வையும் தெளிவாக பிரதிபலிக்கிறது. கள்ளழகரின் அருள் நம் அனைவருக்கும் நல்லிணக்கம், வளம் மற்றும் ஆன்மிக பலத்தையும், நமது தேசத்துக்கு அதிக மகிமையையும் கொண்டு வரட்டும்” என்று ஆளுநர் கூறியுள்ளார்.

## எங்களது வேலையை சரியாக முடித்துவிட்டோம்:
# ஏர் மார்ஷல் ஏ.கே. பாரதி பேட்டி

புது தில்லி, மே 13-

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான சண்டையின் போது, அலைகள் போல பாகிஸ்தானிலிருந்து ட்ரோன்களும் ஆளில்லா சிறு போர் விமானங்களும் இந்திய எல்லையை நோக்கி வந்தன. அவை அனைத்தும் இந்திய பாதுகாப்புப் படையால் முறியடிக்கப்பட்டதாக விமானப் படையின் ஏர் மார்ஷல் ஏ.கே. பாரதி தெரிவித்தார்.



மேலும், பாகிஸ்தான் இந்தியா மீது தாக்குதல் நடத்தப் பயன்படுத்திய ட்ரோன்கள் அனைத்தும் துருக்கியில் தயாரிக்கப்பட்டவை என்றும், எங்களது வேலையை சரியாக முடித்துவிட்டோம், எங்களிடம் எதிர்பார்க்கப்பட்டதை நிறைவாக செய்துவிட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் சண்டை குறித்து தலைமை இயக்குநர் லெஃப்டினண்ட் ஜெனரல் ராஜீவ் கயி நேற்று (மே 12) செய்தியாளர் சந்திப்பில் விமானப்படை நடவடிக்கைகளின் தலைமை இயக்குநர் ஏர் மார்ஷல் ஏ. கே. பாரதி, கடற்படை நடவடிக்கைகளின் தலைமை இயக்குநர் வைஸ் அட்மிரல் ஏ. என். பிரமோத் ஆகியோருடன் சேர்ந்து விளக்கமளித்தார்.

பாகிஸ்தானுக்கு, இந்தியா தரப்பில் கொடுக்கப்பட்ட பதிலடி குறித்து விமானப் படையின் ஏர் மார்ஷல் ஏ.கே. பாரதி விவரித்ததாவது,

பாகிஸ்தான் விமானப்படையின் தாக்குதலை, இந்தியாவின் நவீன மற்றும் பாரம்பரிய ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தியதை முறியடித்தோம். பாகிஸ்தான் அனுப்பிய அனைத்து ட்ரோன்களையும் வான் பாதுகாப்பு ஆயுதங்கள் மூலம் எதிர்கொண்டோம். நவீன ரக ஆயுதங்களோடு, பாரம்பரிய ஆயுதங்களையும் பாகிஸ்தானுக்கு எதிராக சண்டையில் பயன்படுத்தி தாக்குதலை முறியடித்துள்ளோம்.

நமது வான் பாதுகாப்பு வலிமையான சுவர் போன்றது. அதை தகர்ப்பது எளிதல்ல. மத்திய அரசின் துணையால்தான் இந்த வலிமையை அடைந்தோம். மத்திய அரசு நிதி ரீதியாக, கொள்கை ரீதியாக பல வகைகளில் துணை நின்றது. மத்திய அரசின் துணையால் கடந்த 10 ஆண்டுகளில் வான் பாதுகாப்பு அமைப்பு வலிமையடைந்தது. பாகிஸ்தானின் விமானப்படை தளத்தை அடித்து வீழ்த்தினோம். அதனால் ஏற்பட்ட இழப்புகளின் விடியோக்களையும் பகிர்ந்துகொள்கிறோம் என்று அறிவித்தார்.

பாகிஸ்தானின் ரெய்னியார் விமான தளத்தில் இந்தியா தரப்பில் பலத்த தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் ஏற்பட்ட சேதங்களின் விடியோக்களும் வெளியிடப்பட்டன.


தொடர்ந்து பேசிய ஏ.கே. பாரதி, நமது தரப்பில் குறைவான இழப்புகளே ஏற்பட்டன. இந்த சண்டையை முந்தைய சண்டையோடு ஒப்பிட முடியாது, ஒவ்வொரு மோதலும் தனித்துவமானது என்றும் அவர் குறிப்பிட்டார். எத்தனை போர் விமானங்கள் இந்தியா தரப்பில் பயன்படுத்தப்பட்டன என்ற செய்தியாளர் கேள்விக்கு, பாகிஸ்தான் உடனான சண்டை குறித்த முழு விவரங்களையும் பகிர்ந்து கொள்ள முடியாது என்று பதிலளித்தார் ஏ.கே. பாரதி.

# சேலம் முதிய தம்பதி கொலை: பீகார் இளைஞர் கைது

சேலம், மே 13-

சேலத்தில் மளிகை கடை நடத்தி வந்த முதிய தம்பதி கொலை செய்யப்பட்ட வழக்கில் பீகார் மாநில தொழிலாளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சேலம் சூரமங்கலத்தை அடுத்த ஜாகீர் அம்மாபாளையம் பகுதியைச் சேர்ந்தவர் பாஸ்கரன் ( 65 ). இவர், தனது வீட்டின் ஒரு பகுதியில் சிறிய மளிகை கடை நடத்தி வந்தார். இவரது மனைவி வித்யா (60). வீட்டின் மாடியில் அவரது மகன் வசித்து வந்தார். இந்நிலையில் பாஸ்கரனும் அவரது மனைவி வித்யாவும் நேற்று முன்தினம் மாலை வீட்டில் ரத்த வெள்ளத்தில் கிடந்தனர். இதனைக் கண்ட அப்பகுதி மக்கள், இருவரையும் காப்பாற்ற முயன்றனர். ஆனால், சிறிது நேரத்தில் வித்யா உயிரிழந்துவிட்டார்.



படுகாயத்துடன் இருந்த பாஸ்கரன் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது, வழியில் உயிரிழந்தார். கொலை குறித்து தகவல் அறிந்து, சூரமங்கலம் போலீஸார் நேரில் வந்து விசாரணை நடத்தினர். சேலம் மாநகர காவல் ஆணையர் பிரவீன் குமார் அபினபு , துணை ஆணையர் சிவராமன் மற்றும் போலீஸார் நேரில் வந்து விசாரணை நடத்தினர். பகல் வேளையில் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் நடந்த இரட்டை கொலை அப்பகுதி மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஐந்து தனிப்படை அமைத்து போலீஸார் விசாரணை மேற்கொண்டதில், அதே பகுதியில் வசித்து வந்த சந்தோஷ்குமார் (30), என்பவர் கொலை செய்ததை போலீஸார் கண்டுபிடித்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில், அவருக்கு கடன் பிரச்சினை இருந்துள்ளது. மளிகை கடை நடத்தி வந்த வித்யா, அதிக நகை அணிந்திருப்பது அவருக்கு தெரிந்ததாகவும், அந்த நகையை பறித்தால் கடன் பிரச்சினையை தீர்த்துவிடலாம் என திட்டமிட்டுள்ளார்.

அதன்படி, வித்யா மற்றும் அவரது கணவர் பாஸ்கரன் ஆகியோரை கத்தியால் தாக்கி, வித்யா அணிந்திருந்த 3 சவரன், அவரது கணவர் அணிந்திருந்த 7 சவரன் தங்க நகைகளைப் பறித்துக் கொண்டு அங்கிருந்து அவர் தப்பியது தெரிய வந்தது. சந்தோஷ்குமார், சுமார் 15 வருடங்களுக்கு முன்பு பிஹாரில் இருந்து சேலம் வந்து, டைல்ஸ் கூட்டும் தொழிலில் ஈடுபட்டு வந்தவர். அவர், 35 வருடங்களுக்கு முன்பு பிஹாரிலிருந்து சேலத்தில் குடியேறிய, சுனில்குமார் என்பவரின் மகளை திருமணம் செய்து கொண்டு, 3 குழந்தைகளுடன் சேலத்தில் வசித்து வந்ததும் தெரியவந்தது.


கைது செய்யப்பட்ட சந்தோஷ் குமாரிடமிருந்து அவர் கொள்ளையடித்துச் சென்ற , 3 சவரன் மற்றும் 7 சவரன் தங்க நகைகளையும் , சம்பவத்தின்போது அணிந்திருந்த ரத்தக் கறை படிந்த உடைகளையும் போலீஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

# மது போதையில் தகராறு: நடிகர் விநாயகன் கைது

கொல்லம், மே 13-

மது போதையில் தகராறு செய்த நடிகர் விநாயகன் கைது செய்யப்பட்டார்.

மலையாள நடிகரான விநாயகன், தமிழில், சிலம்பாட்டம், மரியான், காளை, திமிரு, ரஜினியின் ஜெயிலர் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். அடிக்கடி சர்ச்சையில் சிக்குவதை வழக்கமாக வைத்துள்ள விநாயகன் மீது சில வழக்குகள் பதியப்பட்டுள்ளன. பொது இடங்களில் அநாகரிகமாக நடந்து கொண்டதற்காக அவர் ஏற்கெனவே கைதும் செய்யப்பட்டிருந்தார்.



இந்நிலையில் படப்பிடிப்புக்காகக் கொல்லம் சென்ற விநாயகன், அங்குள்ள ஐந்து நட்சத்திர ஓட்டலில் மதுபோதையில் பிரச்சினை செய்துள்ளார். அங்குள்ள ஊழியர்களிடம் தவறாக நடந்து கொண்டதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, விநாயகனை அஞ்சலுமூடு போலீஸார் விசாரணைக்கு அழைத்து வந்தனர். பின்னர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அவரை பரிசோதனைக்கு உட்படுத்தினர். அவர் போலீஸ்காரர்களிடமும் அநாகரிகமாக நடந்துகொண்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் அவர் மீது வழக்குப் பதிவு செய்த போலீஸார் கைது செய்தனர். பின்னர் அவர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

# சத்தீஸ்கர் மாநிலத்தில் விபத்து - 14 பேர் பலி

ராய்ப்பூர், மே 13-

சத்தீஸ்கர் தலைநகர் ராய்ப்பூர் அருகே நடந்த சாலை விபத்தில் 14 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சட்டவுட் என்ற கிராமத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் ராய்ப்பூர்- பலோதாபஜார் சாலையில் உள்ள சரகான் அருகே, பனார்சி கிராமத்தில் திருமண விழாவில் கலந்து கொண்டு, இரவு 12.15 மணியளவில் மினி லாரியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது எதிரே வேகமாக வந்த டிரெய்லருடன் மோதியதில் 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். அதில் 10 பெண்கள், 2 சிறுமிகள், 1 சிறுவன் மற்றும் 6 மாதக் குழந்தை ஆகியோர் அடங்குவர்.

மேலும் காயமடைந்த 30க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு கரௌரா சமூக சுகாதார மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

பலத்த காயமடைந்தவர்கள் மேல் சிகிச்சைக்காக ராய்ப்பூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். அதில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று கூறப்படுகிறது. தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து போலீசார் உள்ளூர்வாசிகளுடம் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். பல பயணிகள் சிதைந்த வாகனத்துக்குள் சிக்கியிருந்ததால் மீட்புப் பணிகளில் சிரமம் ஏற்பட்டது.

# சென்னை பரங்கிமலையில் ரயில் மோதி 2 மாணவர்கள் பலி

சென்னை, மே 13-

சென்னை பரங்கிமலையில் ரயில் மோதி கல்லூரி மாணவர்கள் 2 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

சென்னை பரங்கிமலையில் செல்போன் பேசிக்கொண்டே கல்லூரி மாணவர்கள் 2 பேர் தண்டவாளத்தைக் கடக்க முயன்றனர். அப்போது அவ்வழியாக வந்த மின்சார ரயில் இருவர் மீதும் மோதியதில் தூக்கி வீசப்பட்ட மாணவர்கள் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

பலியான மாணவர்கள் முகமது நஃபூல், சபீர் அகமது என்றும் இவர்கள் தனியார் கல்லூரியில் படித்து வந்ததும் காவல் துறையினர் விசாரணையில் தெரிய வந்துள்ளது. தகவல் அறிந்து வந்த ரயில்வே காவல் துறையினர், இறந்தவர்களின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இவ்வழக்கு தொடர்பாக காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறப்பு அரியர் தேர்வு:
# வரும் 17-ம் தேதிக்குள் விண்ணப்பிக்க அண்ணா பல்கலைக்கழகம் அறிவிப்பு

சென்னை, மே 13-

அண்ணா பல்கலைக்கழகத்தின் இணைப்பு பெற்ற மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் தொலைநிலைக் கல்வி மூலம் பொறியியல் பட்டப் படிப்பு பயின்ற மாணவர்களில் நீண்ட காலமாக அரியர் வைத்துள்ளவர்கள் சிறப்பு அரியர் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட கால உச்சவரம்பைக் கடந்து அரியர் பாடங்களை வைத்திருப்போர் ஏப்ரல் - மே 2025 சிறப்புத் தேர்வு, ஜூன் - ஜூலை 2025 சிறப்புத் தேர்வு எழுத அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு அரியர் தேர்வு எழுத விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பொருத்து தேர்வு மையங்கள் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரியர் வைத்திருக்கும் மாணவர்கள் http://coe1.annauniv.edu என்ற இணையதளத்தில் வரும் மே 17-ம் தேதிக்குள் சிறப்புத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேர்வு மையங்கள், கால அட்டவணை குறித்த அறிவிப்புகள் மே 27-ம் தேதிக்குப் பிறகு வெளியாகும் என்று அண்ணா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

# சித்திரைத் திருவிழாவில் பலியானோரின் குடும்பத்தினருக்கு நிவாரணம்: அமைச்சர்

மதுரை, மே 13-

சித்திரைத் திருவிழாவில் பலியானோரின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கப்படும் என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

மதுரை சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வு நேற்று (மே 12) காலை 6 மணியளவில் நடைபெற்றது. இதில், தங்கக்குதிரை வாகனத்தில் பச்சை பட்டுடுத்தி கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

இதுகுறித்து மதுரையில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, மக்கள் யாரும் சங்கட்டப்படாத அளவுக்கு சித்திரைத் திருவிழா கள்ளழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சி நடந்து முடிந்திருக்கிறது. கட்டுக்கடங்காத கூட்டம் உங்களுக்கே தெரியும் பாலம். பணிகள் நடைபெற்று வருகிறது. பல்வேறு சாலையை புதுப்பித்துள்ளோம். உயிரிழப்பு குறித்து துறைச் சார்ந்து கேட்டறிந்து விளக்கம் அளிப்போம். மிகச் சிறப்பாக இந்த நிகழ்ச்சி நடைபெற்று முடிந்துள்ளது, அதை கொண்டாடுவோம். அப்படி ஏதும் உயிரிழப்பு ஏற்பட்டால் நிவாரணம் தரப்படும் என்றார்.

மதுரை சித்திரைத் திருவிழாவின்போது வைகை ஆற்றில் இருந்த பக்தர் ஒருவர் மாரடைப்பால் பலியானார்.

# ரயிலைக் கவிழ்க்க சதி: வட மாநில நபர் கைது

அரக்கோணம், மே 13-


அரக்கோணம், ஆவடி, திருவாலங்காடு ஆகிய பகுதிகளில் தண்டவாளங்களில் கற்களை வைத்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு, ஆவடி மற்றும் அரக்கோணம் பகுதிகளில் அண்மையில் சிலர் தண்டவாளங்களில் கற்களை வைத்து ரயில்களை கவிழ்க்க சதி செய்திருந்தனர். இதுதொடர்பாக தமிழக போலீஸார் மற்றும் ரயில்வே பாதுகாப்புப் படையினர் தனிப்படை அமைத்து விசாரணை நடத்தி வந்தனர்.

அப்போது எடுக்கப்பட்ட சிசிடிவி காட்சி ஆதாரங்களை வைத்து தெலங்கானா மாநிலம், காச்சிகுடாவில் ரயில்வே பாதுகாப்புப் படையினர் ஒரு நபரை கைது செய்தனர். உத்தரகண்ட் மாநிலம், ஹரிதுவாரை அடுத்த ஹரிப்பூர் காலன் அருகே கங்கை நதி ஓரத்தில் வசித்து வந்த ஓம்(50) என்ற அந்த நபரை தமிழ்நாடு அழைத்து வந்து தீவிர விசாரணை நடத்த ரயில்வே பாதுகாப்புப் படையினர் முடிவு செய்துள்ளனர்.


தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



மக்களுக்கு நன்மை பயக்க வலுவான தலைமை தேவை. அப்போதுதான் மக்கள் பாதுகாப்பாக உணருவார்கள். நாட்டின் வளர்ச்சிக்கு எதிர்கால அரசியலில் ஒரு வலுவான கூட்டணி தேவை. ஆபரேஷன் சிந்தூர் மூலம் உலகம் நமது திறன்களை அங்கீகரித்துள்ளது. சமூகத்தில் ஒற்றுமை இருக்கும்போதுதான் வளர்ச்சி சாத்திம்.

- பவன் கல்யாண்




இந்தியா-பாகிஸ்தான் போர் நிறுத்தை அறிவித்துள்ளது. அமெரிக்காவுக்கு இந்தியாவில் என்ன வேலை? அமெரிக்காவிற்கு இந்தியா - பாகிஸ்தான் போர் குறித்து என்ன தெரியும் ? அமெரிக்காவின் சமாதானத்தை பிரதமர் மோடி ஏற்றது தவறு. அமெரிக்கா கூறியத்திற்கு பிரதமர் மோடி மறுப்பு தெரிவித்து பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுக்க வேண்டும்.

- சுப்பிரமணியன் சுவாமி



உலகம் நம்மை உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. பயங்கரவாதத்துக்கு எதிராகப் போரிடுவது மட்டுமின்றி, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரை முழுமையாக மீண்டும் நம்வசமாக்கிக் கொள்வது முக்கியம். அதுவே நமது இலக்காக இருக்க வேண்டும். காஷ்மீர் விவகாரத்தை சர்வதேச பிரச்னையாக்க முயல்வதை ஏற்க முடியாது.

- சச்சின் பைலட்



விக்ரம் மிஸ்ரி மிகச்சிறந்த பணியை செய்துள்ளார். 2 பெண் அதிகாரிகளுடன் விக்ரம் மிஸ்ரி இந்தியா-பாகிஸ்தான் மோதல் தொடர்பாக மிக அமைதியாகவும், தொழில் நேர்த்தியுடனும் ஊடகங்களிடம் விளக்கமளித்தார். அவரை ஏன் விமர்சனம் செய்ய வேண்டும் என்பது எனக்கு புரியவில்லை. அவர் மீதான விமர்சனங்கள் அபத்தமானது.

- சசி தரூர்

கன்னியாகுமரி மாவட்டத்தில்

# பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது



**கன்னியாகுமரி,மே.13-**
கன்னியாகுமரி கலெக்டர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், கலெக்டர் ஆர்.அழகுமீனா, தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 335 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு கலெக்டர் ஆர்.அழகுமீனா, துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாற்றுத்திறனாளி முன்னாள் படைவீரர்களுக்கு மின்கலம் பொருத்தப்பட்ட சிறப்பு நாற்காலிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இரண்டு முன்னாள் படைவீரர்களுக்கு கலெக்டர் ஆர்.அழகுமீனா, மின்கலம் பொருத்தப்பட்ட சிறப்பு நாற்காலிகள் வழங்கினார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் சேக்அப்துல் காதர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செந்தூர் ராஜன், துணை இயக்குநர் முன்னாள் படைவீரர் நலன் மேஜர் ஜெயகுமார், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

தென்காசி மாவட்டத்தில்

# பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது



**தென்காசி மே.13:**
தென்காசி மாவட்ட ஆட்சியர கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சியர கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை கலெக்டர் பெற்றுக் கொண்டார்.

மாவட்டமாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 04 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.13,500/- வீதம் ரூ.54,000/- மதிப்பிலான மடக்கு சக்கர நாற்காலிகளை கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், வழங்கினார்.

மேலும், இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 397மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் கலெக்டர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், மாவட்ட வழங்கல் -நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அனிதா, உதவி ஆணையர் (கலால்) ராமச்சந்திரன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஜெயபிரகாஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுப்புலெட்சுமி, துணைஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) நம்பிராயர் மற்றும் அனைத்துதுறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பிரானூர் பார்டரில்

# தமிழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்



**தென்காசி மே.13:**
தென்காசி தெற்கு மாவட்டம், தென்காசி மேற்கு ஒன்றியம் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு கழக ஆட்சியின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் பிரானூர் பார்டரில் வைத்து நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தென்காசி மேற்கு ஒன்றிய செயலாளர் திவான் ஒலி தலைமை வகித்தார். தென்காசி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா, கலைஞர் தமிழ்ச்சங்க புரவலர் மலிகா கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஷேக் தாவூது, பொதுக்குழு உறுப்பினர் தமிழ்ச்செல்வி, பண்பொழி பேரூராட்சி மன்ற தலைவரும் பேரூர் நகர செயலாளருமான ராஜராஜன், வடகரை பேரூர் கழக செயலாளர் முகம்மது உசேன் (எ) தங்கப்பா, பிரானூர் பார்டர் ஊராட்சிமன்ற தலைவர் ஆவுடையம்மாள், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் வினோதினி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.ஆர்.கிருஷ்ணராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பிரானூர் பார்டர் கிளை கழக செயலாளர் ராமையா, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் இசக்கி பாண்டியன் உள்ளிட்டோர் வரவேற்புரையாற்றினார். தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் நௌசாத், கடையநல்லூர் இஸ்மாயில், அச்சன்புதூர் மாரித்துரை ஆகியோர் கலந்து கொண்டனர். மாநில பேச்சாளர்கள் சிலம்பை டென்னிசன், சாகுல்ஹமீது கான், ஒன்றிய கழக நிர்வாகிகள் ஒன்றிய துணை செயலாளர்கள் ஐயப்பன், முத்துகுமார், பூமாரி, பொருளாளர் சிங்காரவேல், மாவட்ட பிரதிநிதிகள் பாப்பா, ஞானசெல்வம், சுதாகர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மாவட்ட கவுன்சிலர் பூங்கொடி, ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வவிநாயகம், மல்லிகா, கலாநிதி, உராட்சிமன்ற தலைவர்கள் வேல்சாமி, ஈஸ்வரி மற்றும் ராஜா, சிவனுபாண்டியன், முருகேசன், கருப்பசாமி, சரவணன், பரமசிவன், ராமர், முகம்மதுஈஷா, ரமேஷ், திருமலாபுரம் முருகன், மணலூர் திவான்ஒலி, காமாட்சிநாதன், முருகேசன், மாரியப்பன், காளிதாஸ், ஈஸ்வரன், புன்னைவனம், ராமர், மணிகண்டன், தங்கமணி, ஜஹாங்கீர் உட்பட் சார்பு அணி நிர்வாகிகள், பிரானூர் கழக முன்னோடிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவாக பிரானூர் ஒன்றிய பிரதிநிதி வடிவேல் முருகன் நன்றியுரையாற்றினார்.

திருநெல்வேலி மாவட்டத்தில்

# 5152 பேருக்கு ரூ.7.36 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்: சபாநாயகர் மு.அப்பாவு, அமைச்சர் கே.என்.நேரு வழங்கினர்




**திருநெல்வேலி,மே.13-**
திருநெல்வேலி மாவட்டத்தில் 5152 பயனாளிகளுக்கு ரூ.7.36 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு , நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் வழங்கினார்கள்.

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் இன்று (12.05.2025) நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 5152 பயனாளிகளுக்கு ரூ.7.36 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு , நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.சுகுமார், தலைமையில், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் , மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் , மாநகராட்சி ஆணையாளர் மரு.என்.ஓ.சுகபுத்ரா , துணை மேயர் கே.ஆர்.ராஜூ , மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் , ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் 02 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளும், 216 பயனாளிகளுக்கு ரூ.3.86 கோடி மதிப்பிலான வரன்முறை படுத்தப்பட்ட வீட்டு மனை பட்டாக்களும், வேளாண்மைத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.3,014 மதிப்பிலான விதைகளும், கூட்டுறவுத்துறை சார்பில், 259 பயனாளிகளுக்கு ஆதரவற்ற விதவைகடன், சிறுகுறு தொழில் கடன், மகளிர் சுய உதவிக் குழு கடன் ஆகிய கடன்களும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 15 பயனாளிகளுக்கு ரூ.15.75 இலட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கர பொருத்தப்பட்ட இரு சக்கர வாகனங்களும், மாநகராட்சி சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.1.14 கோடி மதிப்பிலான ஜே.சி.பி இயந்திரங்களும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனம் சார்பில் பாய் நெசவு மற்றும் சேலை நெசவு தொழில்கள் செய்வதற்கு 5 பயனாளிகளுக்கு ரூ.3.20 இலட்சம் மதிப்பிலான கடன் உதவிகளும் என மொத்தம் 5152 பயனாளிகளுக்கு ரூ.7.36 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு , நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சியில் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் நகர்ப்புறத்தில் நீண்ட நாட்களாக குடியிருப்பவர்களுக்கு பட்டாக்கள் வழங்க வேண்டுமென அரசாணை அறிவித்து அதனை செயல்படுத்தி வருகிறார்கள்.

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் அதாவது 20 ஆண்டுகளுக்கு முன்பாக சிறப்பு அனுமதி பெற்று திருச்சி மாவட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து இன்று 20 ஆண்டுகள் கழித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் இன்று பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அமைச்சரவைக் கூட்டத்தை கூட்டி நீண்டகாலமாக நகர்புறத்தில் இருக்கிற மக்களுக்கு பட்டாக்கள் வழங்க வேண்டும் என்று ஒரு தனி தீர்மானம் போட்டு அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி அரசாணையாக வெளியிட்டார்கள்.

அதன் பிரகாரம் இன்று நகர்ப்புறங்களில் நீண்ட காலம் வசிப்பவர்களுக்கு இரண்டு சென்ட் பட்டா வழங்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூபாய் 5.00 லட்சத்திற்கும் குறைவான மதிப்பு உள்ள நிலங்களுக்கு கலெக்டர் அனுமதி பெற்று பட்டா வழங்கலாம். ரூபாய் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மனைகளுக்கு சென்னையில் உள்ள வருவாய்த்துறை செயலாளரிடம் அனுமதி பெற்று வழங்கப்படும்.

நீண்ட நாட்களாக குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென தமிழ்நாடு முதல் அமைச்சர் உத்தரவிட்டார்கள் . அதன்படி சிறிது காலதாமதம் ஏற்பட்டாலும் கண்டிப்பாக பட்டா வழங்கப்படும். கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு எந்த வித தடையும் இல்லாமல் பட்டா வழங்க உத்தரவிடப்பட்டு பட்டா வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கு 10 லட்சம் பட்டா வழங்க வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு வருகிறது. என நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் தெரிவித்தார்கள்.

முன்னதாக, பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர் கிராமம் ரெட்டியார்பட்டி பொருநை அருங்காட்சியகம் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை ஆகஸ்ட் மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திறப்பதற்கான பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து, பாளையங்கோட்டை சீனிவாச நகர் சரண்யா பூங்கா நகர் பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

பாளையங்கோட்டை முருகன்குறிச்சி பகுதியில் நெடுஞ்சாலை துறையின் சார்பில் முருகன்குறிச்சி முதல் மகளிர் காவல் நிலையம் வரை 1.2 கிலோமீட்டர் நீளத்திற்கு சாலையினை 07 மீட்டர் அகலத்தில் இருந்து 10 மீட்டராக அகலப்படுத்தி மூன்று சிறு பாலங்கள் அமைக்கும் பணிகள் ரூபாய். 4 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். பணிகள் அனைத்தும் இந்த மாத இறுதியில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என துறை அலுவலர்களுக்கு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அறிவுறுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மாசுகன்யா , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன் , கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் முருகேசன் , செயற்பொறியாளர்கள் பாண்டியராஜன், ஜோசப் ரன்சட் பெரிஸ் , ஸ்ரீராம் , முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன் , முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன் கான் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாலைராஜா மற்றும் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள், மாநகராட்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள், பயனாளிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**அதிமுகபொதுச்செயலாளர்எடப்பாடிகே.பழனிச்சாமிபிறந்தநாளைமுன்னிட்டுதிருநெல்வேலி புறநகர் மாவட்டம் சார்பில் சேரன்மகாதேவி பேரூராட்சியில் தகவல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் அண்ணா தொழிற் சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ரத்த தான முகாமை சட்டமன்ற உறுப்பினர் இசக்கி சுப்பையா தொடங்கி வைத்து பார்வையிட்டார்.**



**செங்கோட்டை அரசு மருத்துவமனையில் மாநில திட்டக் குழுவினர் ஆய்வு செய்து மருத்துவமனை நிர்வாகத்தை கவனித்து வரும் தென்காசி மாவட்ட சுகாதாரப் பணிகள் இணை இயக்குனர் பிரேமலதா, செங்கோட்டை அரசு தலைமை மருத்துவர் ராஜேஷ் கண்ணன், மருத்துவர்களையும், மருத்துவமனை ஊழியர்களையும் திட்டக்குழுவினர் பாராட்டினர்.**



**கோவில்பட்டி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் நடந்த செவிலியர் தினவிழாவில் கண்காணிப்பாளர் மருத்துவர். பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். நிலைய மருத்துவ அலுவலர் சுதா, சரவண வித்யா ஆகியோர் முன்னிலை வைத்தனர். செவிலியர்களுக்கு ரோட்டரிசங்கம்சார்பில்பொன்னாடைஅணிவிக்கப்பட்டது.செவிலியர்கண்காணிப்பாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.**

# புளியங்குடி செயின்ட் மேரீஸ் மருத்துவமனை 15வது ஆண்டு விழா



**தென்காசி மே.13**
தென்காசி மாவட்டம், புளியங்குடி மதுரை மெயின் ரோடு சிந்தாமணியில் மக்களின் நன்மதிப்பை பெற்று புகழ் பெற்ற மருத்துவமனையாக மருத்துவத்துறையில் குறிப்பாக மகப்பேறு மருத்துவத்தில் சிறப்பான சேவையாற்றி வரும் செயின்ட் மேரீஸ் மகப்பேறு மற்றும் பொது மருத்துமனையின் 15 ஆவது ஆண்டு விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இம்மருத்துவமனை மகப்பேறு மருத்துவத்தில் ஏழை எளிய மக்களுக்காக மிகக் குறைவான கட்டணத்தில் பல்நோக்கு மருத்துவமனையை மிஞ்சும் மருத்துவத்தை வழங்கி வருகின்றனர். இங்கு சுகப்பிரசவத்திற்கு ரூ.20,000, அறுசை சிகிச்சை பிரசவத்திற்கு ரூ.35000 என மிக குறைவான கட்டணத்தில் சிறப்பான மருத்துவ சேவை வழங்கி வருகின்றனர்.

இங்கு 24 மணி நேரமும் செயல்படும் பிரசவ வார்டு, அனைத்து வித சிக்கல் நிறைந்த பிரசவ கேஸ்கள், வலியில்லாத சுகப்பிரசவம், கருவுறமைக்கான சிகிச்சைகள், கர்ப்பவாய் புற்றுநோய் கண்டறிதல், சினைப்பை நீர்க்கட்டி சிகிச்சைகள், ஹார்மோன் பிரச்சனைக்கான தீர்வு, மகளிர் சம்பந்தமான அறுவை சிகிச்சைகள் அனைத்தும் லேப்ராஸ்கோபி மூலம் மிகக்குறைவான கட்டணத்தில் வழங்கப்படுகிறது.

மேலும் இம்மருத்துவமனையில் நரம்பியல் மருத்துவம், இதயவியல் மருத்துவம், சிறுநீரகவியல் மருத்துவம், நுரையீரல் மருத்துவம், புற்றுநோயியல் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை மருத்துவம் லேபராஸ்கோபிக் அறுவை சிகிச்சை மையம், மனநோய் மருத்துவம்,கருவுறாமைக்கான கண்மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வழங்கப்படுகின்றன.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக வி.அந்தோணி சாமி, லூர்து மேரி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். மருத்துவமனை நிர்வாகிகள் ஜேம்ஸ், செல்வ மேரி, மரு.சேவியர், மகப்பேறு மற்றும் மகளிர் நல மேல்நிலை மருத்துவர் ஹேமா மேரி சேவியர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மகப்பேறு மற்றும் மகளிர் நல மேல்நிலை மருத்துவர்கள் வனிதா அன்ன செல்வி, குழந்தையின்மை சிறப்பு மருத்துவர்கள் சுதர்ஷினி, மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவர் இந்திரா, மயக்கவியல் நிபுணர் திவ்யபாரதி, பச்சிளம் குழந்தைகள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவர்கள் ஜோஸ் ஆண்ட்ரு வளன்ராய் உள்ளிட்ட பல்வேறு துறை மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவமனை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

மழைநீர் உயிர்நீர்

### தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில்

# ரூ. 9 கோடி மதிப்பில் பேரறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையம்: அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்

**தென்காசி மே.13:**
தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் ரூ.9 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையத்தினை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே. என்.நேரு திறந்து வைத்தார்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் ரூ.9 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையம், புளியங்குடியில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தினசரி அங்காடி மற்றும் வாசுதேவநல்லூரில் ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்ட பேருந்து நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.சதன்திருமலைக்குமார் ஆகியோர் முன்னிலையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு திறந்து வைத்து குத்து விளக்கேற்றினார்.

நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே. என்.நேரு தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கென பல்லாயிரம் கோடியில், பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். நகர உட்கட்டமைப்பு வசதிகள் கடந்த நான்கு ஆண்டுகளாக மேம்படுத்தப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சியில், பேருந்து நிலைய கட்டடம் பழுதடைந்து இருந்ததால் புதிய நவீன பேருந்து நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு மாற்றுவதற்கு ரூ.9 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலைய கட்டடம் அமைத்தல் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது. தற்போது பேருந்து நிலைய பணிகள் நல்லமுறையில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. புதிதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்தில் 20 பேருந்துகள் நிறுத்துவதற்கு வசதிகளும், ஒரு உணவு விடுதி, தாய்மார்கள் பாலூட்டும் அறை, நேர காப்பாளர் அறை மற்றும் கட்டண கழிப்பறை ஒன்று மற்றும் 39 வணிக கடைகள் போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் 45,000 மக்கள் பயனடைவர். தொடர்ந்து, புளியங்குடி நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ.4 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 74 கடைகள் கொண்ட காந்தி தினசரி அங்காடி கட்டிடம் இலவச ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் 50,000 மக்கள் பயனடைவர்.

மேலும், வாசுதேவநல்லூர் பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நவீனமயமாக்கப்பட்ட பேருந்து நிலையமும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது என நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே. என். நேரு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சங்கரன்கோவில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் விஜயலெட்சுமி, சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் (கூ.பொ) நாகராஜன், புளியங்குடி நகர்மன்ற தலைவர் விஜயா சௌந்தர்ராஜன், புளியங்குடி நகராட்சி ஆணையாளர் ஷாம் கிங்சன், வாசுதேவநல்லூர் பேரூராட்சி மன்ற தலைவர் லாவண்யா, வாசுதேவநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் பதுருனிஷா மற்றும் அரசுஅலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# +2 முடித்த மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி கருத்தரங்கம்: வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேசன் நடத்தியது



தென்காசி மே.13 :
வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேசன் மற்றும் இயந்திரன் எட்ஜ் நிறுவனம் இணைந்து, மே 11, 2025 கரண்டை எஸ்.ஆர் ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில் "உயர் கல்வி வழிகாட்டி" என்ற தலைப்பில் ஒரு நாள் மாணவர் மேம்பாட்டு நிகழ்வை வெற்றிகரமாக நடத்தினர்.

ஜோகோ நிறுவனத்தின் ஆதரவுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில், தென்காசி, அம்பாசமுத்திரம், சுரண்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். இதில் 20-க்கும் மேற்பட்ட கல்லூரிகளும், 15-க்கும் மேற்பட்ட கல்வி மற்றும் தொழில்முறை வழிகாட்டி நிலையங்களும் பங்கேற்றன. நிகழ்வை வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேசன் நிறுவனரும் சமூக ஆர்வலருமான ஆனந்தன் அய்யாசாமி தொடங்கி வைத்தார். அவர் தனது தொடக்க உரையில், "மாணவர்களுக்கு உயர்கல்வி என்பது அவர்களின் கனவுகளை நிறைவேற்றும் பாதையாக இருக்க வேண்டும். இந்நிகழ்வு மூலமாக கிராமப்புற மாணவர்களுக்கு சாத்தியங்களையும், தேர்வுகளையும் எளிதில் அணுக வழிகாட்டுவதே நோக்கம்," என்று கூறினார்.

பேச்சாளர்களாக, பொறியியல், மென்பொருள், மருத்துவம், வணிகம், அரசுப்பணிகள், மற்றும் எதிர்கால தொழில்கள் என பல துறைகளில் நிபுணர்கள் கலந்து கொண்டு தங்கள் அனுபவங்களையும், மாணவர்களுக்கு தேவையான துல்லியமான ஆலோசனைகளையும் வழங்கினர். மாணவர்களும் பெற்றோர்களும் நேரடியாக நிபுணர்களுடன் உரையாடும் கேள்வி-பதில் அமர்வும், ஜமீலா பள்ளி நிறுவனர் பிஸ்மி தலைமையில் நடைபெற்றது.

முடிவில், வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேசன்-இன் ஸ்டார்ட்அப் பிரிவு தலைவர் கோபி வயவபதி நன்றி உரையாற்றினார். "இது ஒரு தொடக்கமே. இதுபோன்ற வழிகாட்டல் நிகழ்வுகளை மாவட்டம் முழுவதும் விரிவுபடுத்த உள்ளோம்" என்றார். இந்த நிகழ்வின் வெற்றிக்கு 50-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள், முருகன், முத்து செல்வம், கற்பகராஜ் மற்றும் இருது இவன்ட்ஸ் ஆகியோர் இணை செய்தனர். மேலும் தகவலுக்கு: வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேசன் – 87782 00402 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளனர்

### கோவில்பட்டியில்

# தமிழக வெற்றிக்கழக மகளிர் அணி ஆலோசனை கூட்டம்



**கோவில்பட்டி மே 13**
தமிழக வெற்றிக் கழக தூத்துக்குடி வடக்கு மாவட்ட மகளிரணி ஆலோசனைக் கூட்டம் தலைவர் விஜய் அறிவுறுத்தலின் பேரில் மாநில பொதுசெயலாளர் புஸ்ஸி என். ஆனந்த் ஆலோசனைப்படி தூத்துக்குடி வடக்கு மாவட்ட பொறுப்பாளர் எஸ். பாலசுப்பிரமணியன் தலைமையில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட மகளிரணி நிர்வாகி எம். செல்வி விஜய் முன்னிலையில் கட்சி அலுவலகத்தில் வைத்து நடந்தது. சமூகத்தில் பெண்களுக்கு எதிராக நடக்கும் கொடுமைகளுக்கு குரல் கொடுக்க வேண்டும், கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியில் உள்ள குறைகளை கண்டறிந்து அதற்காக போராட வேண்டும், அதிக பெண்களை கட்சியில் உறுப்பினராய் சேர்க்க வேண்டும். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் எங்கு நடந்தாலும் எவ்வித சமரசமும் இன்றி முதல் ஆளாக சென்று தட்டிக் கேட்க வேண்டும். என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த கூட்டத்தில் மகளிரணி நிர்வாகிகள் ஜான்சி முருகேஸ்வரி, தங்கலெட்சுமி, முத்துமாரி, செல்வி மஞ்சுளா, முனீஸ்வரி, வெண்ணிலா, உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### சம்சிகாபுரத்தில்

# அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பிறந்த நாள் விழா



**சங்கரன்கோவில், மே.13-**
அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்டம் குருவிகுளம் மேற்கு ஒன்றியம் சார்பாக காரிசாத்தான் ஊராட்சிக்கு உட்பட்ட சம்சிகாபுரத்தில் குருவிகுளம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் இரவிச்சந்திரன் ஏற்பாட்டில் கழக கொடியினை ஏற்றி பொது மக்களுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற துணைத் தலைவர் காளிதாஸ்,அமைப்பு சாரா அணி மாவட்ட இணைச்செயலாளர் கல்யாணசுந்தரம், ஒன்றிய எம்.ஜி. ஆர் இளைஞர் அணி துணைத் தலைவர் சுந்தரமூர்த்தி,முன்னாள் ஊராட்சி கழக செயலாளர் முத்தையா, புதுசுப்புலாபுரம் கிளை கழக செயலாளர்கள் சங்கர் ராஜ், பாலசுப்பிரமணியன், ஒன்றிய பிரதிநிதி நடராஜன்,இராமசுப்பு, தர்மராஜ், இருதயராஜ்,பிரிதிவிராஜ், சுப்பிரமணியன், ஜெயராம்,விக்னேஷ் மற்றும் கழக நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.இதனைத் தொடர்ந்து சங்கரன் கோவிலில் உள்ள விண்மீன் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

# தொழில் முனைவோர்களுக்கான நேர்முகத்தேர்வு: கலெக்டர் தகவல்

**தென்காசி மே.13:**
தென்காசி மாவட்டத்தில் மாவட்ட தொழில் மையம் மூலமாக அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றில் விண்ணப்பித்த தொழில் முனைவோர்களுக்கான நேர்முகத் தேர்வு கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. மேலும் அதற்கு முன்னதாக தொழில் நிறுவனங்களுக்கு தடையில்லா சான்று வழங்கும் ஒரு முனை தீர்வுக் குழு கூட்டமும் முன்னாள் இராணுவ வீரர்களுக்கு தொழில் தொடங்குவதற்கு தமிழக அரசால் மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்கும் 'முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின்'' நேர்முகத்தேர்வும் நடைபெற்றது.பின்னர் கலெக்டர்ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்ததாவது,

தென்காசி மாவட்ட தொழில் மையத்தின் மூலம் முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம் என்ற திட்டமும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரை தொழில் முனைவோராக்கி அவர்களின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அண்ணல் அம்பேத்கர் வணிக சாம்பியன்ஸ் திட்டமும்; தமிழக அரசால் நடப்பு நிதியாண்டில்; செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்ட ரூ.5 கோடி வரையிலான புதிய உற்பத்தி மற்றும் சேவை தொழில்களை திட்டங்களை 25 சதவீத மானியத்துடன் வங்கி கடன் பெற்று தொழில் தொடங்கலாம்.அண்ணல் அம்பேத்கர் வணிக சாம்பியன்ஸ் திட்டத்தின் கீழ் துவங்க இருக்கும் தொழில்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 35சதவீத அரசின் மூலதன மானியமாக வழங்கப்படும். திட்ட மதிப்பீடானது தொழில் துவங்க தேவையான கட்டிடம், இயந்திர தளவாடங்கள், உபகரணங்கள், மற்றும் சோதனை கருவிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.'தொழில் முனைவோர் திட்டங்களில் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுத்துள்ள தொழிலைப் பற்றி தெரிந்து கொள்ளவேண்டும். தொடங்கவுள்ள தொழிலில் போதிய அனுபவமும், பயிற்சியும்; அது தொடர்பான விபரங்களையும், தெரிந்து கொண்டு தொழில் தொடங்கிட வேண்டும். மேலும் தொழில் மீது மிகுந்த ஈடுபாடும் கவனமும் இருக்க வேண்டும். அரசு வழங்கும் இந்தத் திட்டங்களை சரியான முறையில் பயன்படுத்தி தாங்களும் வாழ்வில் முன்னேற்ற நிலை அடைந்து தென்காசி மாவட்டத்தை தொழில் வளமிக்க மாவட்டமாக மாற்றிட முன்வர வேண்டும்''; என கலெக்டர் ஏ.கே. கமல் கிஷோர் தெரிவித்தார்.

**மழைநீர் உயிர்நீர்**

# தோரணமலை முருகன் கோவிலில் சித்ரா பௌர்ணமி கிரிவலம்



**தென்காசி, மே 13:**
தோரணமலை முருகன் கோவிலில் சித்ரா பௌர்ணமியையொட்டி கிரிவலம் நடைபெற்றது. மேலும் தீவிரவாத எதிர்ப்பு உறுதிமொழி எடுத்தக்;கொள்ளப்பட்டது.

தென்காசி-கடையம் சாலையில் தோரணமலை ஸ்ரீ முருகன் கோவில்அமைந்துள்ளது. இக்கோவிலில் மாதாமாதம் பௌர்ணமி தோரும் கிரிவலம் நடப்பது வழக்கம். சித்ரா பௌர்ணமியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செய்து முருகனை வழிபட்டனர்.

தொடர்ந்து தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம் முடியவும் நம்முடைய இந்தியா பொருளாதார வளர்ச்சியில் மேம்படவும்.பருவமழை சரியான நேரத்தில் பெய்து விவசாயம் செழித்திடவும் வேண்டி திரளான பக்தர்கள் கலந்து கொண்ட கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது.

கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது காலை, மதியம் அன்னதானம் நடைபெற்றது நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் பரம்பரை அறங்காவலர் செண்பகராமன் செய்திருந்தார்.

## தவறி விட்டது

நான் 25.04.2025 அன்று செங்கோட்டை பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக காத்துக் கொண்டிருந்தபோது தனித்தேர்வராக எழுதிய என்னுடைய பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் TMR Code & Date : D5000892/25.10.2018 அசல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

சு.ரமேஷ்
த/பெ.சுடலை
112/415, சீனி தெரு,
கே.சி.ரோடு, செங்கோட்டை
தென்காசி மாவட்டம்
செல்: 87781 79925

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**
**அ.தி.மு.ஆ1/77/2025**

ரா.ரூத்,
க.பெ. ராஜன்,
க.எண். 3/17, சர்ச் தெரு,
சுப்பிரமணியபுரம், தென்மலை பாகம் 1, சிவகிரி வட்டம்.
-மனுதார்
1. வட்டாட்சியர், சிவகிரி,
2. சார் பதிவாளர், கரிவலம் வந்த நல்லூர்,
-எதிர்மனுதாரர்

அறிவிப்பு

எனது தாயார் ஞானம்மாள், க.பெ. பிச்சைமுத்து என்பவர் கடந்த 25.10.1987 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ரா.ரூத்,
சுப்பிரமணியபுரம்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**
**அ.தி.மு.ஆ1/12/2025**

அ. மணிமுத்துக்குமார்,
த.பெ. அழகுமலை,
க.எண். 4-7/10ஏ, வடக்கு தெரு,
அருகன்குளம்,
தென்மலை பாகம் 1,
சிவகிரி வட்டம்.
-மனுதார்
1. வட்டாட்சியர், சிவகிரி,
2. சார் பதிவாளர், கரிவலம் வந்த நல்லூர்,
-எதிர்மனுதாரர்

அறிவிப்பு

எனது தாத்தா காளிமுத்து தேவர், த.பெ. சுந்தரத்தேவர் என்பவர் கடந்த 30.09.1972 அன்று 4-7/10ஏ, அருகன்குளம், தென்மலை பாகம் 1, சிவகிரி வட்டம் என்ற முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

அ.மணிமுத்துக்குமார்,
அருகன்குளம்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**
**அ.தி.மு.ஆ1/72/2025**

ரா ஜானகிராம்,
த.பெ. ராமசுப்பு நாயக்கர்,
க.எண். 4/68, வடக்கு தெரு,
கோபாலகிருஷ்ணபுரம்,
செவல்குளம் கிராமம்,
திருவேங்கடம் வட்டம்.
-மனுதார்
1. வட்டாட்சியர், திருவேங்கடம்,
2. சார் பதிவாளர், சங்கரன்கோவில்,
-எதிர்மனுதாரர்

அறிவிப்பு

எனது தாயார் பழனியம்மாள், க.பெ. ராமசுப்பு நாயக்கர் என்பவர் கடந்த 01.03.2004 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ரா.ஜானகிராம்,
கோபாலகிருஷ்ணபுரம்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்**

மாரியப்பன்,
தபெ. ராமசுப்பு,
க.எண்.11, கோட்டை தெற்கு தெரு, எட்டையாபுரம் (பூர்வீகம்)
எட்டையாபுரம் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
-மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், எட்டையாபுரம்.
சார் பதிவாளர், எட்டையாபுரம்.
-எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது உடன்பிறந்த சகோதரி பிரேமா தபெ. ராமசுப்பு என்பவர் கடந்த 30.05.1960 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
மாரியப்பன்,
மனுதார்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்**

அழகுராஜ்,
தபெ. காசி நாடார்,
க.எண்.704, திருவெற்றியூர்,
திருவள்ளூர் மாவட்டம்.
-மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், எட்டையாபுரம்.
சார் பதிவாளர், எட்டையாபுரம்.
-எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது தாயார் வேலம்மாள் கபெ. காசி நாடார் என்பவர் கடந்த 14.04.1970 அன்று தெற்கு தெரு, சோழபுரம் கிராமம், எட்டையாபுரம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். என்ற முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
அழகுராஜ்,
மனுதார்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்**

குரு வெங்கடேஷ்வரி,
கபெ. கிருஷ்ணமூர்த்தி,
க.எண்.12/1, வடக்குத்தெரு,
N.புதுப்பட்டி கிராமம்,
நீராவி புதுப்பட்டி ஊராட்சி,
எட்டையாபுரம் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
-மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், எட்டையாபுரம்.
சார் பதிவாளர், எட்டையாபுரம்.
-எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது பாட்டி தகப்பனாரின் தாயார் கிருஷ்ணம்மாள் கபெ. ஆழ்வார்சாமி என்பவர் கடந்த 13.08.1985 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
குரு வெங்கடேஷ்வரி
மனுதார்.

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தென்காசி**
**RDOTKS**
**இ.ப.வ. எண்.31/2025**
**நாள்-07.05.2025**

அனுப்புநர்
V. ராஜம்மாள்
க/பெ. வேலுச்சாமிதேவர்
3/147, தேவர் சங்க தெரு
கீழக்கலங்கல் கிராமம்-627860
வீரகேரளம்புதூர் தாலுகா,
தென்காசி மாவட்டம்.
-மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுதார் V.ராஜம்மாள் என்பவரின் தந்தை பெரியசீனிச்சாமி தேவர் என்பவர் கடந்த 26.04.1991-ம் தேதியன்று 3/147, தேவர் சங்கத் தெரு, கீழக்கலங்கல்-627860, வீரகேரளம்புதூர் தாலுகா, தென்காசி மாவட்டம் என்ற முகவரியில் வைத்து இறந்தார் என்றும், தனது தந்தையின் இறப்பினை தங்களது அறியாமையால் பதிவு செய்யவில்லை என்றும், மேற்படி தனது தந்தையின் இறப்பினை எந்தவொரு பிறப்பு (ம) இறப்பு பதிவு அலுவலகத்திலும் பதிவு செய்யவில்லை என்றும், மேற்படி இறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தென்காசி கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதார்
V.ராஜம்மாள்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தமிழ்நாடு அரசு
**எருமப்பட்டி (முதல்நிலை) பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை**

ந.க.எண்.75/2025 மாநில நிதிக்குழு நகர்புற சாலை மேம்பாட்டு நிதி (SFC-URDF) 2025-2026 நாள்.02.05.2025

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம் | ஒப்பந்ததாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|
| 1 | எருமப்பட்டி பேரூராட்சி வார்டு எண் - 2, துறையூர் மெயின்ரோடு முதல் சிங்களகோம்பை ஏரி ரேடு வரை மற்றும் சிங்களகோம்பை ஏரி ரோடு முதல் தேவராயபுரம் வரை தார்சாலை மேம்பாடு செய்தல் | 130.00 | 1,30,000 | Class - I | 6 மாதங்கள் |

எருமப்பட்டி பேரூராட்சி 2025-26-ம் ஆண்டு மாநில நிதிக்குழு நகர்புற சாலை மேம்பாட்டு நிதி (SFC-URDF) மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் வழியாக வரவேற்கப்படுகின்றன. எருமப்பட்டி பேரூராட்சியின் செயல் அலுவலர் (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் 19.05.2025 திங்கள் கிழமை பிற்பகல் 03.00 மணி வரை இணையதளம் வழியாக பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 20.05.2025 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும்.
1. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை எருமப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 19.05.2025 ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்குள் https://tntenders.gov.in என்ற வலைதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2157 / ஒப்பந்தப்புள்ளி / 2025
செயல் அலுவலர்
எருமப்பட்டி பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்

**THE KRISHNAGIRI DISTRICT COOPERATIVE SPINNING MILLS LTD.,**
**SA.108 UTHANGARAI, KRISHNAGIRI DISTRICT, TAMIL NADU.**
**INVITING SHORT TERM TENDER FOR TRANSPORT OF CONE YARN BALES**

E-Tenders in Two cover system (Online Technical Bid and Online Financial Bid through e-Procurement Portal) are invited from reputed firms for the transport of cotton bales from various places of the country to the Krishnagiri District Co-operative Spinning Mills ltd., Uthangarai for a period of one year.

| Sl. No. | Name of the work | Period of work | Required Earnest Money Deposit in (Rs.) | Date of closing of e-submission of Technical and Financial bids | Date, time and place of opening of Technical Bids |
|---|---|---|---|---|---|
| 1. | Transportation of Cotton bales | 01.06.2025 to 31.05.2026 | 1,00,000/- | 23.05.2025 upto 11.00 a.m | 23.05.2025, 01.00 PM at Krishnagiri District Cooperative Spinning Mills Ltd., Uthangarai |

The tender documents can be downloaded at **free of cost** from the Government website **https://tntenders.gov.in** Eligibility of the Tenderer and other conditions are stipulated in the Tender Schedule.
DIPR/2167/Tender/2025 ADMINISTRATIVE OFFICER/TENDER INVITING AUTHORITY.

தமிழ்நாடு அரசு
**அத்தனூர் (முதல்நிலை) பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்- ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை**
ந.க.எண்.88/2025 சிறப்பு நிதி திட்டம்: 2025-2026 நாள்.12.05.2025

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | செலுத்த வேண்டிய தொகை முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம் | ஒப்பந்ததாரரின் தகுதி | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|
| 1 | அத்தனூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, ஆலாம்பட்டி மெயின் ரோடு முதல் பேரூராட்சி லிமிட்வரை, அம்மன் கோவில் ரோடு முதல் கிழக்கு மேற்கு 4வது ரோடு, வார்டு எண்.2 தாசன்புதூர் அம்மன் கோவில் ரோடு முதல் வடக்கு தெற்கு 2, 3 மற்றும் 4வது ரோடு, வார்டு எண்.4 அம்மன் கோவில் கிழக்கு பகுதி 3வது ரோடு, வார்டு எண்.6 ஆயிபாளையம், வார்டு எண்.11 என்.ஹெச்7 சேலம் ரோடு முதல் ஆட்டையாம்பட்டி பிரிவு ரோடு மற்றும் தாளம்பள்ளம் பிரிவு ரோடு, வார்டுஎண்.12 என்.ஹெச்7 சேலம் ரோடு முதல் உடுப்பத்தான்புதூர் ரயில்வே ரோடு, உடுப்பத்தான்புதூர் ரோடு முதல் தெற்கு 2வது கிராஸ், மற்றும் வார்டு எண்.14 தோப்பு அருந்ததியர் தெரு ஆட்டையாம்பட்டி பிரிவு ரோடு முதல் வடக்கு தெற்கு 1 கிராஸ் ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த தார் சாலையினை மேம்பாடு செய்தல்.. | 155.00 | 1,55,000/- | Class -I | 6 மாதங்கள் |

அத்தனூர் பேரூராட்சி 2025-2026-ஆம் ஆண்டு சிறப்பு நிதி திட்டத்தின் கீழ் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two cover System) கொண்ட இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் 20.05.2025 செவ்வாய்கிழமை பிற்பகல் 03.00 மணி வரை இணையதளம் வாயிலாக மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 20.05.2025 செவ்வாய்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும்.
1.ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை அத்தனூர் முதல் நிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 19.05.2025-ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்குள் https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ./ 2144/ ஒப்பந்தப்புள்ளி / 2025
செயல் அலுவலர்,
அத்தனூர் பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்.

**பரமத்தி தேர்வு நிலை பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை**
**Special Fund 2025-2026**
ந.க.எண்.157/2025 நாள்:05.05.2025

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சம் | செலுத்தவேண்டிய முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம் | ஒப்பந்த தாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|
| 1 | பரமத்தி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 வெள்ளாளபாளையம் பாரதி நகர் பகுதியில் தார்சாலை பலப்படுத்துதல் | 101.00 | ரூ.101000 | Class-I | 6 மாதங்கள் |

பரமத்தி பேரூராட்சியில் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two cover System) கொண்ட இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் 20.05.2025 பிற்பகல் 03.00 மணி வரை இணையதளம் வழியாக மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 20.05.2025 பிற்பகல் 03.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும்.
1. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 19.05.2025 ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்குள் https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
3. மேற்கண்ட பணிக்கு அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்ட பின்னரே பணி ஒப்படைப்பு உத்தரவு வழங்கப்படும்.

செ.ம.தொ.இ.2121/ஒப்பந்தப்புள்ளி/2025
(ஒம்) செயல் அலுவலர்(பொ), பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்.

**THE KRISHNAGIRI DISTRICT COOPERATIVE SPINNING MILLS LTD.,**
**SA.108 UTHANGARAI, KRISHNAGIRI DISTRICT, TAMIL NADU.**
**NOTICE INVITING SHORT TERM TENDER FOR CONVERSION OF SINGLE CONE YARN IN TO SINGLE HANK/DOUBLED CONE/DOUBLED HANK YARN**

E-Tenders in Two cover system (Online Technical Bid and Online Financial Bid through e-Procurement Portal) are invited from reputed firms for the Conversion of Single Cone Yarn into Single Hank Yarn / Double Cone/Hank Yarn for The krishnagiri District Cooperative Spinning Mills in Tamil Nadu for a period of One Year.

| | | |
|---|---|---|
| 1. | Name of the work | Conversion of Single Cone Yarn into Single Hank Yarn / Double Cone/Hank Yarn Approximate quantity 5.5 lakhs kgs |
| 2. | Period of Work | 01.06.2025 to 31.05.2026 |
| 3. | Required Earnest Money Deposit | Rs.1,00,000/- |
| 4. | Tender Document availability on the portal | 15.05.2025 to 23.05.2025 upto 10.30 a.m |
| 5. | Date of closing of e-submission of Technical and Financial bids | 23.05.2025 upto 11.00 a.m. |
| 6. | Date, Time and Place of Opening the Technical Bids | 23.05.2025, 03.00 PM. at Krishnagiri District Co-operative Spinning Mills Ltd., Uthangarai |

The tender documents can be downloaded at **free of cost** from the Government website **https://tntenders.gov.in** Eligibility of the Tenderer and other conditions are stipulated in the Tender Schedule.
DIPR/2166/Tender/2025 ADMINISTRATIVE OFFICER/TENDER INVITING AUTHORITY.

## டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து
# விராட் கோலி திடீர் ஓய்வு



**மும்பை, மே 13-**

இந்திய அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இங்கிலாந்து தொடருக்கு முன்னதாக டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதற்கான விருப்பத்தை விராட் கோலி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்திடம் (பிசிசிஐ) தெரிவித்திருந்த நிலையில் இந்த ஓய்வு அறிவிப்பு வந்துள்ளது.

**மறுபரிசீலனை...**

முன்னதாக, இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு அனுபவம் வாய்ந்த பேட்ஸ்மேனான விராட் கோலி இருந்தால் சிறப்பாக இருக்கும் என்பதால் அவரது ஓய்வு முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு பி.சி.சி.ஐ. தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால், கோலி தனது விருப்பத்துக்கு முன்னிலை கொடுத்து ஓய்வை அறிவித்துள்ளார்.

**14 ஆண்டுகளுக்கு..**

இது தொடர்பாக கோலி தனது எக்ஸ் சமூகவலைதளப் பக்கத்தில், 14 ஆண்டுகளுக்கு முன்னர் நான் டெஸ்ட் கிரிக்கெட் ஆடினேன். டெஸ்ட் கிரிக்கெட் பயணம் என்னை இவ்வளவுதூரம் கூட்டிச் செல்லும் என்று நான் நினைத்ததில்லை. அது என்னை பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தி, என்னை செதுக்கி, எனக்கு பல பாடங்களைக் கற்றுக் கொடுத்தது. அந்தப் பாடங்களை நான் வாழ்நாள் முழுவதும் கொண்டு செல்வேன்.

**இயன்றதை எல்லாம்...**

வெள்ளை நிற ஆடையில் விளையாடுவது எப்போதும், ஆழமான உணர்வை தரும். டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது என்பது எளிதானது அல்ல. ஆனால், இந்தக் கடினமான முடிவை நான் சரியான நேரத்தில் எடுத்துள்ளேன். டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு நான் என்னால் இயன்றதை எல்லாம் கொடுத்துள்ளேன். பதிலுக்கு அது எனக்கு நான் எதிர்பார்க்காததை எல்லாம் தந்தது.

**விடைபெறுகிறேன்...**

இன்று நன்றி நிறைந்த இதயத்துடன் விடைபெறுகிறேன். டெஸ்ட் கிரிக்கெட்டுக்கும், எனது சகாக்களுக்கு, என்னை ஆளாக்கியவர்களுக்கும் நன்றி. என்னுடைய டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையை எப்போதும் புன்னகையுடன் திரும்பிப் பார்ப்பேன்." என்று பதிவிட்டுள்ளார்.

**டெஸ்ட் பயணம்:**

விராட் கோலி இதுவரை 123 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ளார், அதில் 68 டெஸ்ட் போட்டிகளில் கேப்டனாக இருந்தார். இதில் 9,230 ரன்களை 46.85 என்ற சராசரியில் எடுத்துள்ளார். கடைசியாக பார்டர் கவாஸ்கர் டிராபியில் பெர்த் டெஸ்ட் போட்டியில் இந்திய வெற்றியில் கோலி 100 ரன்கள் எடுத்தார். ஜூலை 2023-க்குப் பிறகு கோலி டெஸ்ட்டில் எடுத்த முதல் சதமாக அது அமைந்தது. 2019-ல் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக புனேவில் 254 ரன்கள் எடுத்ததுதான் அவரது கரியர் பெஸ்ட் ஸ்கோர். கடைசி 2 வருடங்களாக அவரது சராசரி 32-ஐ த் தாண்டவில்லை.

### கவுதம் காம்பீர் புகழாரம்

இந்திய அணியின் தலைமை பயிற்சியாளரான கவுதம் காம்பீர், விராட் கோலிக்கு புகழாரம் சூட்டியுள்ளார். இது குறித்து காம்பீர் தனது எக்ஸ் பக்கத்தில், "சிங்கத்தைப் போன்ற பேரார்வம் கொண்ட ஒரு மனிதன்! உங்களை மிஸ் பண்ணுவேன் சீக்ஸ் ...." என்று பதிவிட்டுள்ளார். இந்த பதிவு வைரலாகி வருகிறது. கோலியின் தலைமையின் கீழ், இந்தியா டெஸ்ட் கிரிக்கெட்டில் நம்பர் 1 அணியாக இருந்தது. மேலும் 2018-19 சுற்றுப்பயணத்தின் போது ஆஸ்திரேலியாவில் முதல் தொடரையும் வென்றது குறிப்பிடத்தக்கது.

## இந்திய அணி டெஸ்ட் கேப்டன் பதவி:
# சுப்மன் கில்-ரிஷப் பண்ட் இடையே கடும் போட்டி

**மும்பை, மே 13-**

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் கேப்டன் பதவிக்கு சுப்மன் கில் - ரிஷப் பண்ட் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

**ரோகித் சர்மா ஓய்வு...**

இந்திய கிரிக்கெட் அணியின் 3 நிலைகளும் (டெஸ்ட், ஒருநாள் போட்டி, 20 ஓவர்) ரோகித் சர்மா கேப்டனாக பணியாற்றி வந்தார். 20 ஓவர் உலக கோப்பையை வென்ற பிறகு ரோகித் சர்மா அதில் இருந்து ஓய்வு பெற்றார். இதனால் சூர்யகுமார் யாதவ் 20 ஓவர் அணிக்கு கேப்டனாக செயல்பட்டு வருகிறார். இந்த நிலையில் ரோகித் சர்மா டெஸ்டில் இருந்து ஓய்வு பெறுவதாக திடீரென அறிவித்தார். அதே நேரத்தில் ஒருநாள் போட்டியில் தொடர்ந்து விளையாடுவேன் என்று தெரிவித்தார்.

**புதிய கேப்டன் யார்?...**

ரோகித் சர்மா ஓய்வு பெற்றதால் இந்திய டெஸ்ட் அணிக்கு புதிய கேப்டனாக யார்? நியமிக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கிறது. இந்திய அணி ஜூன் மாதம் முதல் ஆகஸ்ட் வரை இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 டெஸ்டில் விளையாடுகிறது. அடுத்த மாதம் 20-ந் தேதி டெஸ்ட் தொடர் தொடங்குகிறது. இந்த தொடருக்கு புதிய கேப்டனை தேர்வு செய்ய வேண்டிய நிலை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்துக்கு உள்ளது.

**கில்லுக்கு வாய்ப்பு...**

வேகப்பந்து வீரர் ஜஸ்பிரீத் பும்ரா டெஸ்ட் கேப்டனாக நியமிக்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் அவர் டெஸ்ட் கேப்டன் பதவியில் இருக்க விருப்பம் இல்லை என்று தெரிவித்து விட்டார். 5 டெஸ்ட் முழுவதும் தன்னால் கேப்டனாக செயல்பட இயலாது என்று பும்ரா தேர்வு குழுவினரிடம் கூறியதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனால் டெஸ்ட் கேப்டன் பதவிக்கான போட்டியில் சுப்மன் கில் - ரிஷப் பண்ட் ஆகியோருக்கு இடையே கடும் போட்டி நிலவி வருகிறது. இதில் சுப்மன் கில்லுக்கு தான் அதிக வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

# அடுத்தவர்களுக்கு வழிவிட்டாக வேண்டும்: மனம் திறந்த ரோகித்

**மும்பை, மே 13-**

டி-20 உலகக்கோப்பையை நாங்கள் வெல்லவில்லை என்றால் நான் ஓய்வு அறிவித்திருப்பேன் என்று ரோகித் கூறினார்.

**ரோகித் ஓய்வு...**

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார் ரோகித் சர்மா. இந்திய அணிக்காக 67 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 4,301 ரன்கள் அடித்துள்ளார். இதில் 12 சதங்களும், 18 அரை சதங்களும் அடங்கும். இந்நிலையில், டி20 கிரிக்கெட் உலகக்கோப்பை வென்ற கையோடு ஓய்வு அறிவித்தது குறித்து ரோகித் முதல்முறையாக மனம் திறந்து பேசியுள்ளார்.

**வழிவிட்டாக...**

இது தொடர்பாக பேசிய ரோகித், "டி20 உலகக்கோப்பையை நாங்கள் வெல்ல வில்லை என்றால் நான் ஓய்வு அறிவித்திருப்பேன். இதனையடுத்து நான் விளையாடுவது சரியாக இருக்காது. அடுத்தவர்களுக்கு நான் வழிவிட்டாக வேண்டும். ஆனால் நாங்கள் கோப்பையை வென்றோம். நான் நன்றாக விளையாடினேன்.

**இதுவே சரியான நேரம்...**

ஓய்வு பெறுவது குறித்து எதையும் முன்கூட்டியே முடிவு செய்ய முடியாது. டி20 உலகக் கோப்பைக்குப் பிறகு ஓய்வு பெற நான் திட்டமிட வில்லை. உண்மையில், கோப்பையை வென்ற பிறகு, நீங்கள் இன்னும் அதிகமாக விளையாட முடியும் என்று நீங்கள் உணர்கிறீர்கள், ஆனால், டி20களுக்கு நன்றி சொல்ல இதுவே சரியான நேரம் என்று நான் நினைத்தேன்" என்று தெரிவித்தார்.

# சுப்மன் குறித்து மைக்கேல் வாகன்

எதிர்வரும் இங்கிலாந்துக்கு எதிரான 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடருக்கான இந்திய அணியின் கேப்டனாக ஷுப்மன் கில் நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்நிலையில், அது குறித்து தனது கருத்தை முன்னாள் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் கேப்டன் மைக்கேல் வான் பகிர்ந்துள்ளார். "ஷுப்மன் கில் இப்போதைக்கு கேப்டன் வீரர் அல்ல. ஆகவே அவரை துணைக் கேப்டனாக நியமிக்கலாம்" என்று மைக்கேல் வான் பரிந்துரைத்துள்ளார்.

அவர் தன் எக்ஸ் தள பதிவில், "இங்கிலாந்து தொடருக்கான இந்திய அணியை தேர்வு செய்யும் பொறுப்பு என்னிடம் இருந்தால் ஷுப்மன் கில் துணைக் கேப்டனாக இருக்கலாம் என்று கருதுவேன்" என கூறியுள்ளார். இந்திய அணியின் கேப்டனாக அந்த ட்விட்டில் கோலியை அவர் பரிந்துரைத்திருந்தார். ஆனால், டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து விராட் கோலி ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இங்கிலாந்து தொடருக்கான இந்திய டெஸ்ட் அணியை ஷுப்மன் கில்லுக்கு கேப்டன் பொறுப்பு வழங்குகிற பட்சத்தில் பும்ரா, கே.எல்.ராகுல் ஆகியோரை பிசிசிஐ முயற்சிக்கலாம். ஸ்ரேயஸ் ஐயரும் கேப்டன் பொறுப்புக்கு சிறந்த சாய்ஸாக இருப்பார்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 1,200 கனஅடியாக குறைந்தது

**தர்மபுரி, மே 13-**


ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 1200 கனஅடியாக குறைந்தது.

தமிழக-கர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர் வரத்து குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது. மேலும் கர்நாடகா காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும், தமிழக எல்லையோர காவிரி ஆற்று பகுதிகளிலும் பெய்த மழையின் அளவு குறைந்தது.

இதனால் தமிழக கர்நாடக எல்லை பகுதியான பிலிகுண்டுலுவில் நீர்வரத்து நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் ஒகேனக்கல்லுக்கு 1500 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து 1200 கன அடியாக குறைந்தது.

இதனால் மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீரின் வேகம் குறைந்தது. மேலும் விடுமுறை நாளான நேற்று முன்தினம் சுற்றுலா பயணிகள் அதிகளவில் குவிந்தனர். பயணிகள் குடும்பத்துடன் பரிசல் பயணம் மேற்கொண்டும் காவிரி ஆற்றின் அழகையும் ரசித்தனர்.

### ஐ.பி.எல்.: ஹேசில்வுட் திடீர் விலகல்



இந்தியா - பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட போர் பதற்றம் அமெரிக்க அதிபர் டிரம்பின் தலையீட்டால் தணிந்தது. இந்தியா - பாகிஸ்தான் தாக்குதல் நிறுத்தத்தை தொடர்ந்து பாதியில் நிறுத்தப்பட்ட ஐ.பி.எல். தொடர் வரும் வியாழன் அல்லது வெள்ளிக்கிழமை தொடங்க உள்ளதாக தக8வல் வெளியாகியுள்ளது மேலும், ஐ.பி.எல். தொடரை மீண்டும் தொடங்குவதற்காக சொந்த ஊர் திரும்பிய வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களை மீண்டும் அழைக்கும் பணியில் அந்தந்த அணி நிர்வாகங்கள் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில், தோள்பட்டை வலியால் அவதிப்பட்டு வரும் ஆர்.சி.பி. அணியின் முக்கிய வீரரான ஜோஷ் ஹேசில்வுட் மீதமுள்ள ஐ.பி.எல். போட்டிகளில் விளையாட மாட்டார் என்று தகவல் வெளியாகியுள்ளது. இருப்பினும், உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்பாக சரியான நேரத்தில் குணமடைந்து விடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### '269' எண்ணை குறிப்பிட்ட கோலி

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர பேட்ஸ்மேனான விராட் கோலி சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இருந்து விடை பெறுவதாக நேற்று அறிவித்துள்ளார். கடந்த 2011-ம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகம் ஆன அவர் 123 போட்டிகளில் விளையாடி அதில் 30 சதம் உட்பட 9,230 ரன்கள் குவித்துள்ளார். தோனிக்கு பின் கேப்டனாக பொறுப்பேற்ற விராட் கோலியின் தலைமையில் இந்திய அணி டெஸ்ட் கிரிக்கெட்டில் உலகின் நம்பர் 1 அணியாக சில வருடங்கள் ஆதிக்கம் செலுத்தியது. இருப்பினும் சமீப காலமாக டெஸ்ட் கிரிக்கெட்டில் தடுமாறிய விராட் கோலி தனது 36 வயதில் ஓய்வை அறிவித்துள்ளார்.

விராட் கோலி வெளியிட்ட ஓய்வு குறிப்பின் இறுதியில் '269' விடைபெறுகிறது என்று குறிப்பிட்டிருந்தார். இதற்கான காரணம் என்னவெனில், '269' என்பது கோலியின் தொப்பி எண்ணாகும். இது அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தியாவுக்காக அறிமுகமான 269-வது வீரர் என்பதைக் குறிக்கிறது. அவரோடு சேர்ந்து அந்த நம்பரை கொண்ட தொப்பியும் தற்போது விடை பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

### இளமை கால பயிற்சியாளர் பெருமை

இந்திய அணியின் முன்னாள் கேப்டன் விராட் கோலி, டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறும் அறிவிப்பை நேற்று வெளியிட்டார். இந்திய அணிக்காக கடந்த 2011-ம் ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் அறிமுகம் ஆன அவர் 123 போட்டிகளில் விளையாடி அதில் 30 சதம் உட்பட 9,230 ரன்கள் குவித்துள்ளார். இந்த சூழலில் தற்போது ஓய்வு பெற்றுள்ள விராட் கோலிக்கு பல தரப்பினரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

இதுபற்றி அவருடைய இளமை கால பயிற்சியாளரான ராஜ்குமார் சர்மா கூறும்போது, நாட்டுக்காக அவர் செய்த விசயங்களுக்காகவும் மற்றும் இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டாக செய்துள்ள விசயங்களுக்காகவும், அவரை குறித்து நான் பெருமை கொள்கிறேன் என்றார். அவருடைய முடிவை பாராட்டுவதுடன், ஆதரிக்கிறேன். ஒரு நாள் கிரிக்கெட் உலக கோப்பை போட்டியில் இந்தியாவுக்காக அவர் விளையாடுவார் என நம்புகிறேன். அதில், 100 சதவீதம் உள்ளார்ந்த ஈடுபாட்டோடு அவர் செயல்படுவார் என்றும் நம்பிக்கை தெரிவித்து உள்ளார்.

### கோலி ஓய்வு குறித்து அனுஷ்கா

இந்திய அணியின் முன்னாள் கேப்டன் விராட் கோலி நேற்று டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். அவருக்கு முன்னாள் வீரர்கள் மற்றும் பிரபலங்கள் பலர் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் விராட் கோலி ஓய்வுக்கு அவரது மனைவியும் சினிமா நடிகையுமான அனுஷ்கா சர்மா உருக்கமான பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:- உங்களின் சாதனைகள், மைல்கல்கள் குறித்து தான் எல்லாரும் பேசுவார்கள். ஆனால் நீங்கள் வெளியே காட்டிக்கொள்ளாத கண்ணீர், யாரும் பார்க்காத போராட்டங்கள், கிரிக்கெட் மீது நீங்கள் கொண்டுள்ள அளப்பரிய காதல் ஆகியவைதான் எப்போதும் எனது நினைவில் நிலைத்து நிற்கும். ஒவ்வொரு டெஸ்ட் தொடருக்கு பிறகும், கூடுதல் அடக்கம், ஞானத்துடன் திரும்ப வந்தீர்கள்.. இந்தப் பயணத்தை அருகே இருந்து பார்த்தது எனக்கு கிடைத்த பெருமை என உருக்கமாக பேசியுள்ளார்.

### ஸ்மிருதி மந்தனா புதிய சாதனை

இலங்கையில் நடைபெற்ற மகளிர் முத்தரப்பு ஒருநாள் போட்டியில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது. கொழும்பில் ஆர். பிரேமதாச ஸ்டேடியத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், இந்திய அணி 97 ரன்கள் வித்தியாசத்தில் தொடரை வென்றது. டாஸ் வென்று பேட்டிங்கைத் தேர்ந்தெடுத்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 342 ரன்கள் எடுத்தது. இந்திய இன்னிங்ஸில் தொடக்க ஆட்டக்காரர் ஸ்மிருதி மந்தனா சதம் அடித்து விளாசினார். 343 ரன்கள் என்ற கடினமான இலக்கை துரத்திய இலங்கை அணி, இந்திய பந்து வீச்சாளர்களின் தாக்குதலைத் சமாளிக்க முடியாமல் 48.2 ஓவர்களில் 245 ரங்களில் சுருண்டது.

இறுதிப் போட்டியில் அபார சதம் அடித்து அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்த ஸ்மிருதி மந்தனா, 'ஆட்ட நாயகி' விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சினேகா ராணா, 'தொடரின் சிறந்த வீராங்கனை' விருதை வென்றார். இதற்கிடையில், இந்தப் போட்டியில் சதம் அடித்ததன் மூலம், ஒருநாள் போட்டிகளில் அதிக சதம் அடித்த பெண்கள் கிரிக்கெட் வீரர்களின் பட்டியலில் ஸ்மிருதி மந்தனா மூன்றாவது இடத்திற்கு முன்னேறி சாதனை படைத்தார்.

# எனது சிந்தூரை திருப்பி கொடுங்கள்: பி.எஸ்.எப். வீரரின் மனைவி கதறல்

**கொல்கத்தா, மே 13-**

பாகிஸ்தானில் சிக்கியுள்ள பி.எஸ்.எப். வீரரின் மனைவி, தன் கணவரை மீட்க வேண்டும் என மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த மாதம் 23 ஆம் தேதி பாகிஸ்தான் எல்லைப் பகுதிக்குள் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை வீரர் பூர்ணம் சாஹு என்பவர் தவறுதலாக சென்று மாட்டிக்கொண்டார். பஞ்சாபின் பெரோஸ்பூரில் உள்ள ஒரு விவசாய நிலத்தில் இருந்து கான்ஸ்டபிள் சாஹுவை பாகிஸ்தான் ரேஞ்சர்கள் கைது செய்தனர்.

எல்லைக்கு அருகே விவசாயிகள் குழுவை அழைத்துச் சென்ற சாஹு, ஒரு மரத்தின் கீழ் ஓய்வெடுக்கச் சென்று, தெரியாமல் பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்ததாக பி.எஸ்.எப். அதிகாரிகள் தெரிவித்தனர். பாகிஸ்தான் சிறைபிடித்துள்ள பி.எஸ்.எப். வீரரை மீட்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில், பூர்ணம் சாஹுவின் மனைவி ரஜனி தனது கணவரின் நிலை குறித்து பேசிய ரஜனி, "என் கணவர் பாகிஸ்தான் ராணுவத்தால் கடத்தப்பட்டுள்ளார். அவர் அவர்களின் காவலில் உள்ளார். அவரது கண்கள் கட்டப்பட்ட புகைப்படத்தை அவர்கள் வெளியிட்டுள்ளனர். பி.எஸ்.எப். அதிகாரிகள் எங்கள் வீட்டிற்கு வந்து என் கணவரை மீண்டும் அழைத்து வர முயற்சிப்பதாக எங்களிடம் சொன்னார்கள். ஆனால் இப்போது நிலைமை ஒரு போர் போல் உள்ளது. அடுத்து என்ன செய்தி வரும் என்று எனக்குத் தெரியவில்லை" என்று தெரிவித்தார்.

ஆபரேசன் சிந்தூர் குறித்து கேள்வி எழுப்பிய போது மனம் உடைந்த ரஜனி, "எனது சிந்தூரைத் திருப்பிக் கொடுங்கள்" என்று அழுதார்.

# காஞ்சிபுரம் கோவிலில் மீண்டும் வடகலை - தென்கலை பிரச்சனை

**காஞ்சிபுரம், மே 13-**

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவில் வைகாசி பிரம்மோற்சவத்தின்போது வடகலை - தென்கலை பிரச்சனை மீண்டும் ஏற்பட்டுள்ளது.

வைகாசி பிரம்மோற்சவத்தின் 2-ம் நாள் விழாவில் ஹம்ஸ வாகனத்தில் எழுந்தருளி வரதராஜ பெருமாள் அருள்பாலித்தார். அப்போது மண்டகபடி கண்டருளியபோது வடகலை தென்கலை பிரிவினருக்கும் இடையே மந்திர புஷ்பம் பாடுவதில் வாக்குவாதம், மோதல் ஏற்பட்டது. இருபிரிவினருக்கும் இடையே வாக்குவாதத்தால் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய முடியாமல் அவதி அடைந்தனர்.

கடந்த வருடமும் காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் திருக்கோவில் வைகாசி பிரம்மோற்சவத்தின் மண்டகப்படியின்போது பிரபந்தம் பாடுவதில் வடகலை தென்கலை பிரிவினர்களுக்கிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சி.பி.எஸ்.இ. தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ள ஐ.வி.ஆர்.எஸ். வசதி அறிமுகம்

**சென்னை, மே 13-**

சி.பி.எஸ்.இ. தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ள ஐ.வி.ஆர்.எஸ். வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் பயின்று பொதுத் தேர்வெழுதிய மாணவர்கள், தேர்வு முடிவுகள் எப்போது வெளியாகும் என எதிர்பார்ப்போடு காத்திருக்கிறார்கள். இதற்கிடையே தேர்வு முடிவுகளை அறிந்துகொள்ள, பதிவு செய்யப்பட்ட குரல் அமைப்பு - ஐ.வி.ஆர்.எஸ். வசதி அழைப்பு வழியாக மாணவர்கள் தங்களது தேர்வு பதிவு எண் மூலம் முடிவுகளை அறிந்து கொள்ளும் வசதியும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இணைய வசதி அல்லது தற்போதைய சூழ்நிலையில் இணைய சேவை துண்டிக்கப்பட்டிருக்கும் பகுதியில் இருக்கும் மாணவர்களுக்காக சி.பி.எஸ்.இ., ஐ.வி.ஆர்.எஸ். மூலம் தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பை வழங்கியுள்ளது.

தேர்வு எழுதியிருக்கும் மாணவர்கள் தங்கள் சரியான எஸ்.டி.டி. குறியீட்டைக் கொண்டு சி.பி.எஸ்.இ. அறிவித்திருக்கும் எண்ணை டயல் செய்து, மாணவர்களின் தேர்வு பதிவு எண் மற்றும் பிற விவரங்களை உள்ளிட வேண்டும். இதற்கு, பதிவு செய்யப்பட்ட குரலின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

உங்கள் தகவல்கள் சரியாக இருப்பின், மாணவர்களின் தேர்வு முடிவுகளை இந்த அமைப்பு குரல் வழியாகவே வெளியிடும். மாணவர் பெற்ற மதிப்பெண்களை சப்தமாக வாசிக்கப்படும். இதன் மூலம் இணையதளம் இல்லாத பகுதிகளில் உள்ள மாணவர்களும் தேர்வு முடிவுகளை எளிதாக அறிந்துகொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராணுவ ரகசியங்களை பாகிஸ்தானுக்கு கசியவிட்டதாக மேலும் 2 பேர் கைது

**புதுடில்லி, மே 13-**

இந்திய ராணுவத்தின் செயல்பாடுகள் மற்றும் ரகசியங்களை பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு பகிர்ந்து வந்த பெண் உள்பட 2 பேரை பஞ்சாப் போலீசார் கைது செய்தனர்.

அண்மையில் இந்திய ராணுவம் பற்றிய தகவல்கள், புகைப்படங்களை பாகிஸ்தான உளவுத்துறைக்கு கொடுத்து வந்ததாக பஞ்சாப் மாநிலம் அமிர்தரஸில் 2 பேரை போலீசார் கைது செய்தனர். இந்த நிலையில், இந்திய ராணுவத்தின் ரகசியங்களை பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு கசிய விட்டதாக மேலும் இரண்டு பேரை பஞ்சாப் போலீசார் கைது செய்துள்ளனர்.

இது குறித்து டி.ஜி.பி., கவுரவ் யாதவ் கூறியதாவது; உளவுத்துறை கொடுத்த தகவலின் பேரில், பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களுக்கு இந்திய ராணுவத்தின் செயல்பாடுகளை பகிர்ந்து வந்த மலேர்கோட்லாவைச் சேர்ந்த குஷாலா மற்றும் யாமீன் முகமது ஆகிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் செல்போன்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், குற்றம்புரிந்த அதிகாரிகளும் அடையாளம் காணப்பட்டு, அவர்களின் பெயர்களும் எப்.ஐ.ஆரில் இடம்பெற்றுள்ளது.

ராணுவம் தொடர்பான ரகசியங்களை பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு கொடுத்து விட்டு, அதற்காக இவர்கள் ஆன்லைனில் பணத்தை பெற்றுள்ளனர். இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# ரோகித் சர்மாவை விவ் ரிச்சர்ட்ஸ் உடன் ஒப்பிட்ட சுனில் கவாஸ்கர்



**மும்பை, மே 13-**

டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ரோகித் சர்மா ஓய்வு அறிவித்ததையடுத்து சுனில் கவாஸ்கர் அவரைப் புகழ்ந்து பேசியுள்ளார்.

**டெஸ்ட் சாம்பியன்ஷிப்...**

ரோகித் சர்மா 67 டெஸ்ட் போட்டிகளில் 4,301 ரன்களை எடுத்துள்ளார். 24 போட்டிகளில் இந்திய டெஸ்ட் அணியை வழிநடத்திய ரோகித், அதில் 12-ல் வெற்றி கண்டுள்ளார். 9 போட்டிகளில் தோற்றுள்ளார். 2023-ல் இந்திய அணி அவரது கேப்டன்சியில் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று இறுதியில் ஆஸ்திரேலியாவிடம் தோல்வியை தழுவியது.

**புல் ஷாட்...**

ரோகித் சர்மா குறித்து சுனில் கவாஸ்கர் கூறியதாவது கிரிக்கெட்டில் விவ் ரிச்சர்ட்ஸ் ஆடுவதை பார்க்கும் பாக்கியம் எனக்கு உண்டு. விவ் ரிச்சர்ட்ஸ் ஆடும் புல் ஷாட்டை அதே போல் ரோகித் சர்மா ஆடுகிறார். இதைப் பார்க்கும் பாக்கியமும் எனக்குக் கிடைத்திருக்கிறது. விவ் ரிச்சர்ட்ஸ் அந்த புல் ஷாட்டை ஸ்கொயர் லெக் முதல் வைட் மிட் ஆன் வரை புல் ஷாட்களை ஆடுவார். பந்தை 'பவுன்ஸ்' ஆகும் இடத்திலிருந்தே சந்திப்பார் விவ் ரிச்சர்ட்ஸ். ரோகித் சர்மா பவுன்ஸுக்கு அடியில் மட்டையைக் கொடுத்து மிட்விக்கெட் அல்லது பைன் லெக்கில் தூக்கி சிக்ஸர்கள் விளாசுகிறார்.

**பவுலர்களுக்கு பேரழிவு...**

பந்துகள் சிக்ஸர்களுக்குப் பறக்கடிக்கப்படுவது பவுலர்களுக்கு பேரழிவை ஏற்படுத்துவதோடு அவர்களது உற்சாகத்தையும் உணர்வையும் உத்வேகத்தையும் காலி செய்து விடக்கூடியது. ரோகித், விவ் ரிச்சர்ட்ஸ் இருவரிடமும் பிற ஷாட்களும் உள்ளன. ஆனால், இருவரிடமும் உள்ள தனித்துவ ஷாட் புல் ஷாட்.

**ஸ்பின்னர்களை போல்...**

2021-ல் பிரிஸ்பன் டெஸ்ட் போட்டியின் போது கம்மின்ஸ், ஹேசில்வுட், ஸ்டார்க் உள்ளிட்ட வேகப் பந்து வீச்சை ரோகித் எதிர்கொண்டு ஆடும்போது, பந்து வீசப்பட்ட பிறகு தன் ஹெல்மெட்டைக் கழற்றி விட்டு, தலையை வாரிக் கொண்டு, மீண்டும் ஹெல்மெட்டை அணிந்து கொண்டு பந்தை அடிக்கலாம் என்று கூறியதாக நினைவு. அவ்வளவு நேரம் அவருக்கு இருக்கிறது. ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்களை ஸ்பின்னர்களை ஆடுவது போல் ஆடுகிறார். இவ்வாறு கவாஸ்கர் கூறியுள்ளார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# சினிமா CINI செய்திகள்

## ‘தொடரும்’ - திரை விமர்சனம்



பாரதிராஜா விடம் ஸ்டண்ட் நடிகராக பணியாற்றிய மோகன்லால், ஒரு விபத்தால் அதனை விட்டுவிட்டு தேனியில், வாடகை கார் ஓட்டுநராக, தனது குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார். மனைவி, ஒரு மகள், ஒரு மகன் என அளவான குடும்பம், அது தான் தன் உலகம் என்று வாழும் மோகன்லாலுக்கு அவரது பழைய அம்பாசிட்ட கார் மீதும் மிகுந்த ஆர்வத்தோடு பார்த்து வருகிறார். இதற்கிடையே, மோகன் லால் ஊரில் இல்லாத போது, அவரது காரை போலீஸ் பறிமுதல் செய்து காவல் நிலையத்தில் வைத்து விடுகிறது. ஊரில் இருந்து திரும்பும் மோகன்லால் காரை மீட்க போராடுகிறார். சப்-இன்ஸ்பெக்டர் காரை கொடுக்க முடியாது என்று முரண்டு பிடித்தாலும், போலீஸ் இன்ஸ்பெக்டர் கருணை காட்டி காரை திரும்ப ஒப்படைக்கிறார். அதே சமயம், அந்த காருடன் மோகன்லால், இன்ஸ்பெக்டர் மற்றும் இரண்டு காவலர்களுடன் பயணிக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது.

அந்த இரவு பயணம் மோகன்லால் வாழ்க்கையில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் பயணமாக அமைகிறது. அது என்ன? என்பதை யூகிக்க கூடிய விதத்தில் சொன்னாலும், கதையோடு பார்வையாளர்களையும் பயணிக்க வைக்கும் விதத்தில் சொல்வதே ‘தொடரும்’ திரைபடம். மோகன்லால் பென்ஸ் என்கிற சண்முகம் என்ற கதாபாத்திரத்தில் பொறுப்பான குடும்ப தலைவராக நடித்திருக்கும் மோகன்லால், பிள்ளைகளிடம் எதார்த்தமாக பழகுவது, சிறு சிறு குறும்புத்தனம் மூலம் மனைவியிடம் காதலை வெளிப்படுத்துவது என்று ரசிக்க வைக்கிறார். தனக்கு ஏற்பட்ட பிரச்சனைக்கு பழி தீர்ப்பதற்காக ஆக்ரோஷமாக களம் இறங்கும் போது, மாஸாக மிரட்டுபவர் சண்டைக்காட்சிகளில் கூட சிறந்த நடிகராக கவனம் ஈர்க்கிறார். சமூகப் பிரச்சனையை மேலோட்டமாக சொல்லியிருந்தாலும், அதை மோகன்லால் போன்ற முன்னணி நடிகர்கள் மூலம் சொல்லியிருப்பதால் இயக்குநர் சொல்ல வந்த விசயம் மக்கள் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகிறது. மொத்தத்தில் இந்த ‘தொடரும்’ அனைத்து மக்களாலும் போற்றப்படும்.

## ‘கஜானா’ - திரை விமர்சனம்



அடர்ந்த காட்டு பகுதியில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புதைத்து வைத்த பொக்கிஷம் இருப்பதாகவும், அதனை டைனோசர் காலங்களில் வாழ்ந்த யாளி விலங்கு பாதுகாத்து வருவதாகவும் சொல்லப்படுகிறது. அந்த பொக்கிஷத்தை எடுக்க பலர் முயற்சித்து பலியாகி கொண்டிருந்தாலும், பேராசை பிடித்த மனிதர்கள் பலர் அந்த பொக்கிஷத்தை அடைவதற்கு தொடர்ந்து முயற்சி செய்கிறார்கள். அவர்களில் ஒருவராக நாயகன் இனிகோ பிரபாகர் தனது குழுவினருடன் நாகமலைக்கு செல்கிறார். மறுபக்கம், அதே பொக்கிஷத்தை கைப்பற்றுவதற்கான முயற்சியில் பிரபல அகழ்வாராய்ச்சியாளரான வேதிகாவும் ஈடுபடுகிறார். இவரகளுடன் யோகி பாபு மற்றும் நான் கடவுள் ராஜேந்திரனும் அந்த காட்டுக்குள் பயணப்படுகிறார்கள்.

இதற்கிடையே, பொக்கிஷம் இருப்பதாக நம்பப்படும் அந்த இடத்தில், நாக இனத்திற்கு சொந்தமான பஞ்ச பூதங்களையும் கட்டுப்படுத்தும் நவரத்தின கற்கள் இருக்கும், உண்மை தெரிய வருவதோடு, அதனை கைப்பற்றுவதற்காக பல வருடங்களாக போராடி வரும் கருட இனத்தின் தலைவி சாந்தினி, இனிகோ பிரபாகர் அந்த இடத்தை நெருங்கும் போது, அவரிடம் இருந்து அதனை கைப்பற்ற திட்டமிடுகிறார். நவரத்தின கற்களை கைப்பற்ற முயற்சிக்கும் இவர்களின் நிலை என்ன ஆனது?, அதனை பாதுகாக்கும் யாளி உண்மையா?, நாகமலையை சுற்றியிருக்கும் மாய உலகத்தின் பின்னணி என்ன? போன்ற கேள்விகளுக்கு பிரமாண்டமான வி.எப்.எக்ஸ் காட்சிகள் மூலமும், சுவாரஸ்யமான ஃபேண்டஸி கற்பனை கதை மூலமும் பதில் அளிப்பது தான் ‘கஜானா’. தமிழ் சினிமாவின் அட்வெஞ்சர் படங்கள் வருவது என்பதே மிக அரிதானது, அதில் அட்வெஞ்சர் உடன் ஃபேண்டஸி மற்றும் பிரமாண்டமான வி.எப்.எக்ஸ் காட்சிகளுடன் வெளியாகியிருக்கும் ‘கஜானா’ சிறுவர்களுக்கு மட்டும் இன்றி பெரியவர்களுக்கும் புதிய அனுபவத்தை கொடுக்கிறது. சுவாரஸ்யமான திரைக்கதை அமைத்திருப்பதோடு, ஃபேண்டஸி, அட்வெஞ்சர், அனிமேஷன் ஆகியவற்றின் மூலம் இந்த ‘கஜானா’-வை பிரமாண்ட படைப்பாக கொடுத்திருக்கும் இயக்குநர் பிரபதீஸ் சாம்ஸ், சிறப்பு வணக்கம். மொத்தத்தில், இந்த ‘கஜானா’ அனைவரும் பார்த்து ரசிக்கலாம்.

## ‘நிழற்குடை’ - திரை விமர்சனம்



அமெரிக்கா செல்ல வேண்டும் என்ற கனவோடு வாழும் விஜித் - கண்மணி தம்பதிக்கு ஒரு பெண் குழந்தை இருக்கிறது. இருவரும் வேலைக்கு செல்வதால் குழந்தையை பார்த்துக் கொள்ள தேவயானியை வேலைக்கு சேர்க்கிறார்கள். தேவயானியின் அன்பு மற்றும் அக்கறையால் குழந்தையும் அவரிடம் பாசத்தோடு இருக்கிறாள். இதற்கிடையே, அமெரிக்காவில் குடியேற முயற்சிக்கும் விஜித் - கண்மணி தம்பதிக்கு விசா கிடைத்துவிடுகிறது. இதனால், குழந்தையை பிரிவதை நினைத்து தேவயானி வருத்தமடைகிறார்.

இதற்கிடையே, குழந்தை திடீரென்று காணாமல் போக, தங்கள் அமெரிக்கா பயணத்தை தடுக்க இதை செய்திருக்கலாம் என்று நினைக்கும் குழந்தையின் பெற்றோர், சிலர் மீது புகார் அளிக்கிறார்கள். அதன்படி, அவர்களிடம் போலீஸ் விசாரித்தும் குழைந்தை கிடைக்காத நிலையில், குழந்தையை கண்டுபிடித்தார்களா?, தேவாயனியை விட்டு பிரிய மறுக்கும் குழந்தையின் நிலை என்ன? என்பதை உணர்வுப்பூர்வமாக சொல்வதே ‘நிழற்குடை’ திரை படம்.

காதைக்கு தோவையான கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் தேவயானி, தற்போதைய இளம் தலைமுறை தம்பதியினருக்கு பாடம் எடுக்கும் வகையில் நடித்திருக்கிறார். குழந்தை மீது அவர் காட்டும் அன்பும், அக்கறையும் பணம் சம்பாதிப்பது, வசதியாக வாழ்வது என்றே பயணிக்கும் பெற்றோர்கள் பார்க்க கூடிய படம்.

முதியோர் இல்லங்கள் அதிகரிக்கும் இத்தகைய சூழலில், குழந்தை வளர்ப்பிலும் கவனம் செலுத்தாத இந்த தலைமுறையினருக்கு பாடம் சொல்லும்படி படம் பயணித்தாலும், அவ்வபோது திரைக்கதையில் சில திருப்பங்களை வைத்து படத்தை சுவாரஸ்யமாக நகர்த்தி சென்றிருக்கிறார் இயக்குநர் சிவா ஆறுமுகம். மொத்தத்தில், ‘நிழற்குடை’ அனைவராலும் போற்றப்படும்.

## ‘மையல்’ இசை வெளியீடு



ஐகான் சினி கிரியேஷன்ஸ் எல்எல்பி தயாரிப்பில் இயக்குநர் APG ஏழுமலை இயக்கத்தில் நடிகர்கள் சேது,

சம்ரிதி நடிப்பில் உருவாகி இருக்கும் திரைப்படம் ‘மையல்’. இந்தத் திரைப்படத்தின் ஆடியோ மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது.

இயக்குநர் ஏழுமலை பேசுகையில், “இந்த ‘மையல்’ உருவாக காரணம் சேது தான். எல்லாப் புகழும் என் கதாநாயகன் சேதுவுக்குதான். என் தயாரிப்பாளர்களுக்கும் நன்றி. இயக்குநர் சங்கத்தில் இருந்து வாழ்த்த வந்திருக்கும் அனைத்து முன்னோடி இயக்குநர்களுக்கும் வாழ்த்துக்கள். சவுந்தர்யன் சாருடைய மகன் அமர் இந்தப் படத்தில் அழகாக இசையமைத்திருக்கிறார். படத்திற்காக அயராது உழைத்திருக்கும் படக்குழுவினருக்கும் நன்றி. உங்கள் அனைவரது ஆதரவும் தேவை”. என்றார்

## ‘ஜோரா கைய தட்டுங்க’ டிரெய்லர் வெளியீடு



நடிகர் யோகிபாபு நடிப்பில், இயக்குநர் விநீஷ் மில்லினியம் இயக்கத்தில், ‘ஜோரா கைய தட்டுங்க’மாயாஜால வித்தையை நிகழ்த்தும் கலைஞரின் வாழ்வியலை மையப்படுத்திய படம். இப்படம் வரும் மே 16 ஆம் தேதி திரைக்கு வரவுள்ள நிலையில், இப்படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழா, சென்னையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் நடிகர் யோகிபாபு பேசுகையில், “தயாரிப்பாளர் ஜாகிர் அலி மிகவும் கஷ்டப்பட்டு இப்படம் செய்துள்ளார், என்னால் இல்லை, அதற்கு வேறு பல காரணங்கள், ஆனால் படத்தை நன்றாக எடுத்துள்ளார். இயக்குநர் விநீஷ் சார் சொன்னது உண்மை தான்.

தீக்குளிக்கும் பச்சை மரம் 2013ல் நடித்தேன், 1000 ரூபாய் சம்பளம். மீண்டும் பல வருடம் கழித்து போன் செய்து அவர் பேசியவுடனே சொல்லுங்கள் விநீஷ் சார் என்றவுடன் ஆச்சரியப்பட்டார். நான் எப்போதும் பழசை மறக்க மாட்டேன். நான் எல்லோருக்கும் சப்போர்ட் செய்து தான் நடித்துக்கொண்டிருக்கிறேன். என்னிடம் உதவியாளராக இருந்தவர் ஹீரோவாக நடித்தார் அந்தப்படத்தில் ஒரு நாள் நடித்தேன், அந்தப்படத்திற்குத் தான் 7 லட்சம் கேட்டேன் எனப் புகார் சொல்லியுள்ளார்கள். இது நான் நடித்த படம் அதனால் நான் வரவேண்டும், வந்துள்ளேன். நான் என் சம்பளத்தை, நிர்ணயிப்பதில்லை, ஆனால் எனக்குச் சொன்ன சம்பளம் வருவதே இல்லை. எனக்கு வர வேண்டிய சம்பளம் மிகப் பெரிய லிஸ்ட் இருக்கிறது, அதனால் யாரும் தவறாகப் பேசாதீர்கள். இப்படம் மிக நன்றாக வந்துள்ளது எல்லோரும் ஆதரவு தாருங்கள் நன்றி.” என்றார்.

## அலங்காநல்லூர் ஐயப்பன் கோவிலில் குரு பெயர்ச்சி யாகவிழா



**அலங்காநல்லூர், மே 13-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஸ்ரீதர்மசாஸ்தா ஐயப்பன் கோவிலில் குரு பெயர்ச்சியை முன்னிட்டு பல்வேறு யாக பூஜைகள் நடைபெற்றது. தொடர்ந்து நவக்கிரகங்களில் உள்ள வியாழ குருபகவான் மற்றும் தெட்சிணாமூர்த்திக்கும் பால், சந்தனம், விபூதி, தயிர் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்கள், அலங்காரங்கள், தீபாராதனைகள் நடைபெற்றது. ரிஷப ராசியில் இருந்து மிதுன ராசிக்கு குரு பகவான் பெயர்ச்சியாவதை முன்னிட்டு பரிகார ராசிக்காரர்கள் மற்றும் சுற்று வட்டாரங்களை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் சிறப்பு யாகசாலை பூஜையில் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். பின்னர் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகி சீனிவாசன் மற்றும் ஐயப்ப, முருக பக்தர்கள் செய்திருந்தனர்.

## நத்தம்: பனைமரத்தில் இருந்து தவறி விழுந்தவர் உயிரிழப்பு

**நத்தம், மே 13-**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே சேந்த மங்கலம்- மேட்டுப்பட்டியை சேர்ந்தவர் அருள்குமார். (32). கூலி தொழிலாளி. இவர் கடந்த 10-ம் தேதி நத்தம் அருகே புன்னப்பட்டியில் உள்ள தனது மனைவி ஜெயமாலாவின் தாய்மாமன் ஜனகர் வீட்டிற்கு சென்றுள்ளார். அப்போது அங்குள்ள பனை மரத்தில் ஏறி நுங்குகள் பறித்துள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக கை தடுமாறி மரத்தில் இருந்து கிழே விழுந்தார்.

ஆபத்தான நிலையில் இருந்த அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் அவர் மேல்சிகிச்சைக்காக மதுரை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் அங்கு சிகிச்சை பலனில்லாமல் நேற்று முன் தினம் காலை அருள்குமார் இறந்து விட்டார். இச்சம்பவம் குறித்து நத்தம் போலீஸ்-சப் -இன்ஸ்பெக்டர் தர்மர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்

### திண்டுக்கல் மாவட்டத்தில்

## எடப்பாடி பழனிசாமி பிறந்த நாளை முன்னிட்டு ரத்த தானம் முகாம்

### முன்னாள் அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்



**திண்டுக்கல், மே 13-**

கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி 71 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திண்டுக்கல் கிழக்கு மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் தொழிற்சங்க பேரவை சார்பில் மாபெரும் ரத்த தானம் முகாம் திண்டுக்கல்லில் நடைபெற்றது.

கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி 71 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தமிழகம் முழுவதும் கழக நிர்வாகிகள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். அதன் வரிசையில் திண்டுக்கல் மேற்கு, கிழக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப பிரிவு மற்றும் தொழிற் சங்க பேரவை சார்பில் மாபெரும் ரத்ததான முகாம் திண்டுக்கல் மாவட்ட தலைமை கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

ரத்ததான முகாமை கழக பொருளாளரும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன், கழக துணை பொதுச் செயலாளரும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான நத்தம் இரா. விசுவநாதன் ஆகியோர் தலைமை தாங்கி துவக்கி வைத்தனர்.

முகாமில் ஏராளமான கழக நிர்வாகிகள் தொண்டர்கள் ரத்த தானம் வழங்கினர். அவர்களுக்கு சான்றிதழ்களையும், பழங்கள் மற்றும் குளிர்பானங்களை திண்டுக்கல் சி.சீனிவாசன், நத்தம் இரா. விசுவநாதன் ஆகியோர் வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து தகவல் தொழில்நுட்ப பிரிவின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வீடியோ கான்ஃபரன்ஸ் மூலமாக கழக பொருளாளர் திண்டுக்கல் சி.சீனிவாசன் பேசுகையில், திண்டுக்கல் கிழக்கு மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவின் சார்பில் ரத்ததான முகாம் மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பெண்கள் ரத்த தானம் கொடுக்க ஆர்வமாக வந்து உள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது இதேபோன்று மாவட்டம் முழுவதும் மருத்துவ முகாம், அன்னதானம், கோவில்களில் சிறப்பு வழிபாடு, கோவில்களில் சிறப்பு பூஜை, ஆதரவற்றோர் இல்லத்தில் அன்னதானம், ரத்த தான முகாம், பொது மருத்துவ முகாம், இருதய சிகிச்சை முகாம் உள்ளிட்ட பல்வேறு மக்களுக்கான நலத்திட்ட உதவிகள் கழகத்தின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று பேசினார்.

கழகத் துணைப் பொதுச் செயலாளர் நத்தம் இரா. விசுவநாதன் பேசுகையில், எடப்பாடி பழனிசாமி பிறந்தநாள் விழாவை ஆடம்பரமாக கொண்டாடுவதை தவிர்த்து மக்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவாக கழக நிர்வாகிகள் கொண்டாடி வருகின்றனர். இன்று மட்டுமல்ல வாரம் முழுவதும் தொடர்ந்து பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது. அடுத்த 72 வது பிறந்தநாள் விழாவை கழக பொதுச் செயலாளர் எடப்பாடியார் பிறந்த நாள் விழாவை கொண்டாடும் பொழுது தமிழக முதல்வராக அமர்ந்து இருப்பார் என்று பேசினார்.

நிகழ்ச்சியில் கழக அமைப்பு செயலாளர் வி.மருதராஜ், மாநில கழக அம்மா பேரவை இணை செயலாளர் ஆர்.வி.என். கண்ணன் நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தேன்மொழி சேகர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தென்னம்பட்டி பழனிச்சாமி, கே.எஸ்.என். வேணுகோபால், மாநகராட்சி எதிர்க்கட்சி தலைவர் சி.எஸ். ராஜமோகன், திண்டுக்கல் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் இராஜசேகரன், சாணார்பட்டி ஒன்றிய கழக செயலாளர் இராமராசு, ஒட்டன்சத்திரம் ஒன்றிய கழக செயலாளர் என்.பி.நடராஜ், ரெட்டியார் சத்திரம் ஒன்றிய கழக செயலாளர் ஆர்.கே.சுப்பிரமணி, ஆத்தூர் ஒன்றிய கழக செயலாளர்கள் சின்னச்சாமி, மயில்சாமி, வத்தலகுண்டு பேரூர் கழக செயலாளர் பீர் முகமது, மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சுதாகரன், மேற்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் வி.டி.ராஜன், கிழக்கு மாவட்ட பேரவை செயலாளர் யூசுப் அன்சாரி, மேற்கு மாவட்ட பாசறை செயலாளர் சிவபாரதி, மாணவரணி செயலாளர் ராஜேஷ் கண்ணா, மாநகராட்சி பகுதி செயலாளர்கள் சுப்பிரமணி, மோகன், சேசு, மாவட்ட மீனவர் அணி செயலாளர் மனோகரன், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெப்போலியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் மதுரை மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைச் செயலாளர் வீரமார்பன், மண்டல துணை தலைவர் கௌதம் பால்ராஜ், மண்டல இணை செயலாளர் தினேஷ்குமார், கிழக்கு மாவட்ட செயலாளர் சதீஷ்குமார், மேற்கு மாவட்ட செயலாளர் சேட்டை கார்த்திக், கிழக்கு மாவட்ட தலைவர் பிரசன்ன கார்த்திகேயன், மேற்கு மாவட்ட தலைவர் நீல மணிகண்டன், மேற்கு மாவட்ட இணை செயலாளர்கள் நாகராஜ், ராஜ்குமார், கிழக்கு மாவட்ட இணை செயலாளர்கள் முத்துகுமார், ஜெயசீலன், துணை செயலாளர்கள் மார்க் ஆலன், முத்து மணிவண்ணன், கிழக்கு மாவட்ட துணை தலைவர் குகன், பழனி நகர செயலாளர் செந்தில், நிலக்கோட்டை பேரூர் செயலாளர் ஆதிஸ், சேவுகம்பட்டி பேரூர் செயலாளர் மதன், நிலக்கோட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் ஜான்சன், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய செயலாளர் ஜெகதீசன், முருகன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

### அருப்புக்கோட்டையில்

## எடப்பாடி. பழனிசாமி பிறந்த நாள் விழா: 500 பேருக்கு அன்னதானம்



**அருப்புக்கோட்டை, மே 13-**

அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர், எடப்பாடியார் பழனிச்சாமி பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரத்தில் உள்ள மீனாட்சி சொக்கநாதர் திருக்கோவிலில் மீனாட்சி சொக்கநாதர் முருகன் சிறப்பு அபிஷேகம், சிறப்பு ராஜ அலங்காரம் செய்து பொதுமக்களுக்கு இனிப்புகள் அன்னதானம் விருதுநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜவர்மன், எதிர்கோட்டை சுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர் வீர சுப்பிரமணியன் , மாவட்டக் கழக அவைத் தலைவர் ஜெயபெருமாள், அருப்புக்கோட்டை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் போடம்பட்டி சங்கரலிங்கம் ஆகியோர் முன்னிலையில் அருப்புக்கோட்டை நகரக் கழகச் செயலாளர் சோலை .சேதுபதி ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர்கள் கருப்பசாமி, முனியாண்டி, தேவதுரை, சந்திரன், வேங்கை மார்பன், பல்க் முனியசாமி, மணிகண்டன், மாரியப்பன், பிற அணி மாவட்ட செயலாளர்கள் சேரன் முகமது இஸ்மாயில், சங்கர் குமார், சக்கரவர்த்தி சங்கர், கருப்பசாமி பாண்டியன், நகர அவைத் தலைவர் பம்பாய் மணி, நகரப் பொருளாளர் செந்தமிழ் செல்வன், மகளிர் அணி நகரச் செயலாளர் பிரேமா, நகர மீனவர் அணி செயலாளர் சிப்ஸ் முருகேசன், இளைஞர் இளம்பெண்கள் பாசறை நகரச் செயலாளர் பாலாஜி, நகரத் துணைச் செயலாளர் மாரிமுத்து முத்துமாரி, விளையாட்டு வீரர்கள் அணி தலைவர் லெனின், மற்றும் நிர்வாகிகள் சவுண்டையா, வெள்ளக்கோட்டை கழுசிவலிங்கம், தர்மர், குழாப்புட்டு முத்து, ஆட்டி சண்முகசுந்தரம், ராமச்சந்திரன், ராம் சுந்தர், விஜய் மல்லர், அன்புநிதி, தினகரன், சரவணகுமார், தேவராஜ், மறவர் தெரு சத்யராஜன், பொன்ராம், அண்டா நாகராஜ், சுப்பிரமணியன், ஐ.டி.விங் கண்ணன், மகளிர் அணி கலைச்செல்வி, வார்டு செயலாளர்கள் அண்டா கழு சிவலிங்கம், ராஜப்பன், சின்னசாமி, ஏ. ஜி. மாரிமுத்து, பந்தா பாண்டியன், பரமசிவம், முத்துகிருஷ்ணன், சந்திரமோகன், வி.வீரமணி, கோபாலகிருஷ்ணன், கல்பட்டறை கண்ணன், ராஜசேகர், கணேசன், தர்மராஜ், சிவசுப்பிரமணியன், மணிகண்டன், செந்தில்குமார், சண்முகவேல் தேவர், ஆறுமுகம், சின்ன சடையப்பன், சொக்கலிங்கம், நாராயணசாமி, ஈஸ்வரன், ராஜா முகமது சேட், சி.மணி, ராமச்சந்திர பிரபு, வடை மாரிமுத்து, பால் மாரிமுத்து, பி.ஆர். பழனியப்பன், தங்கம், மற்றும் கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## ஒட்டன்சத்திரம் வழக்கறிஞர்கள் சங்க புதிய நிர்வாகிகள் தேர்வு

**ஒட்டன்சத்திரம், மே 13-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வழக்கறிஞர்கள் சங்க தலைவராக சையது இப்ராஹிம், செயலாளராக கிருஷ்ணகுமார், துணைதலைவராக வினோத்குமார், பொருளாளராக பழனிச்சாமி, துணைச் செயலாளராக ராம்குமார், செயற்குழு உறுப்பினர்களாக கண்ணன், அகிலா, ரகு, சுபாஷினி, ஸ்டாலின், நூலகர்களாக சின்ன கருப்பன், கிரீஸ் கந்தராஜா உள்ளிட்டோர் 2025 - 2026 ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.





உலகப்புகழ் பெற்ற மதுரை சித்திரை திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான கள்ளழகர் மதுரை வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பச்சை பட்டு உடுத்தி ஆற்றில் இறங்கிய அழகரை லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.



நீலகிரி மாவட்டத்திற்கு நேற்று வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு புத்தகம் வழங்கி வரவேற்றார்.



சென்னை வெட்டுவாங்கேணி கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பாஷ்யம் பிரார்த்தனாவில் நடைபெற்ற வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் நிறுவனர்-வேந்தர் ஐசரிகணேஷ் மகள் பிரீத்தா-லஷ்வின்குமார் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் அ.தி.மு.க பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.



சென்னை தரமணியில் செயல்பட்டு வரும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் தமிழரசு இதழ் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கருணாநிதியின் மார்பளவு சிலையை திறந்து வைத்து அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது உருவச்சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இதில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, க.கணபதி, ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, செயலாளர் வே.ராஜாராமன், இயக்குநர் இரா.வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் செல்வராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

# முப்படை தளபதிகள், அமைச்சர்களுடன் பிரதமர் மோடி மீண்டும் ஆலோசனை

புதுடெல்லி, மே 13-

நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி நேற்றும் (மே.12) ஆலோசனை மேற்கொண்டார்.

டெல்லியில் உள்ள பிரதமர் இல்லத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் அனில் சவுகான், விமானப்படைத் தளபதி ஏ.பி. சிங், ராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி, கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே. திரிபாதி, வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதமர் மோடி தலைமையில் நேற்று முன்தினம் (மே 11) நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், போர் நிறுத்த ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மீறினால், தக்க பதிலடி கொடுக்குமாறு முப்படைகளுக்கும் பிரதமர் மோடி உத்தரவிட்டார். தீவிரவாத ஊடுருவலை முற்றிலும் தடுப்பதற்கான வழிகள் குறித்தும் இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இந்த பின்னணியில், நேற்றும் பிரதமர் மோடி தலைமையில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



கள்ளழகரை தரிசிக்க வந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு மதுரை செல்லூர் பாலம் ஸ்டேஷன் ரோட்டில் ஆர்.ஜெ.தமிழ்மணி கல்வி அறக்கட்டளை சார்பில் அன்னதானத்தை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் அறக்கட்டளை நிறுவனர் ஜெயந்தி ராஜூ, டிரஸ்டிகள் விஜயகுமார், சௌமியா விஜயகுமார், கணேஷ்பிரபு, ரம்யா கணேஷ்பிரபு, விஷ்ணு சாகர், விபின் சாகர், வருண்சாகர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# தமிழரசு இதழ் அலுவலக வளாகத்தில் தோரணவாயில்-கருணாநிதி சிலை

## துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார்

சென்னை, மே 13-

சென்னை தரமணியில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் முதல்வர் கருணாநிதியின் சிலையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

சென்னை, தரமணியில் உள்ள செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' அலுவலகம் மற்றும் அச்சக வளாகத்தில், முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு நினைவாக, ரூ.25 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள "கலைஞர் நூற்றாண்டு தோரணவாயில்" மற்றும் "கருணாநிதியின் மார்பளவுச் சிலை" ஆகியவற்றை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- முன்னாள் முதல்வர் கருணாநிதியால் 1970-ம் ஆண்டு தமிழ்நாடு அரசின், செய்தி மக்கள் தொடர்புத் துறையால் தொடங்கப்பட்ட 'தமிழரசு' இதழானது கடந்த 55 ஆண்டுகளாக, தமிழ்நாடு அரசின் மக்கள் நலத்திட்டங்களையும், சாதனைகளையும் தொகுத்து வழங்கி, அரசின் அச்சு ஊடகமாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 'தமிழரசு' இதழ் 55-வது ஆண்டினை நிறைவு செய்யும் தருணத்தில், அச்சக வளாகத்தில் "கலைஞர் நூற்றாண்டு தோரணவாயில்" மற்றும் "கருணாநிதியின் மார்பளவுச் சிலை" ஆகியவற்றை அமைத்திட முடிவு செய்யப்பட்டது. அதன்படி, ரூ.25 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள, "கலைஞர் நூற்றாண்டு தோரணவாயில்" மற்றும் "கருணாநிதியின் மார்பளவுச் சிலை" ஆகியவற்றை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் திறந்து வைத்தார்.

இதையொட்டி அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியை உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார். அதன்பிறகு, தமிழரசு அச்சகத்திற்கு சென்று, தமிழரசு இதழ் அச்சடிக்கும் பணிகளையும், அங்கு பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களையும் பார்வையிட்டு, இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் கோவை, நீலகிரி உள்பட

# 7 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, மே 13-

தமிழகத்தில் கோவை, நீலகிரி உள்பட 7 மாவட்டங்களில் செவ்வாய்க்கிழமை (மே 13) கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த மையம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு: மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் 17-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் ஆகிய பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

இன்று (மே 13-ல்) நீலகிரி, கோவை, ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. மே 14, 15 ஆகிய தேதிகளில் நீலகிரி, கோவை, ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், திருப்பத்தூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை லேசான சாரல் மழை பெய்தது. திங்கள்கிழமை (மே 12) ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. இருப்பினும், ஏனைய இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி ஃபாரன்ஹீட் டையொட்டி இருக்கும்.

தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை பகல் நேரத்தில் அதிகபட்சமாக ஈரோடு, பரமத்திவேலூரில் தலா 104.36 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பநிலை பதிவானது. மதுரை விமான நிலையம் - 104, மதுரை நகரம் - 103.64, திருச்சி, பாளையங்கோட்டை - (தலா) 103.1, வேலூர் - 102.38, திருத்தணி - 101.66, சென்னை மீனம்பாக்கம் - 100 டிகிரி ஃபாரன்ஹீட் என மொத்தம் 9 இடங்களில் வெயில் சதமடித்துள்ளது. மேலும், தமிழகத்தில் இன்று அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட 3 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




மதுரையில் கள்ளழகரை தரிசிக்க வந்த பக்தர்களுக்கு மதுரை அண்ணாநகர் பகுதியில் அம்மா சேரிடபிள் டிரஸ்ட் சார்பில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் எம்.எல்.ஏ. அன்னதானம் வழங்கினார்.